விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 17 வெள்ளிக்கிழமை (01.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

## பயங்கரவாத தடை நீக்கப்பட வேண்டும்

(ஜெனிவா)

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக சர்வதேச தரத்துடன் கூடிய சட்டம் வரவேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்றைய தினம் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

24 ஆம் பக்கம் பார்க்க....

# போர்க்குற்ற விசாரணையிலிருந்து இலங்கை பின்வாங்கிச் செல்லவே முயற்சிக்கின்றது

## சர்வதேச நெருக்கத்தை வலியுறுத்தி ஜெனிவாவில் கஜேந்திரகுமார் உரை



(யாழ்ப்பாணம்)

தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான தண்டனைகளில் இருந்து குற்றவாளிகளை தப்பவைக்கும் விடயத்தில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் உறுதியாக இருந்து வந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி ஜெனிவா மனித உரிமை பேரவையில் பேசிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், போர்க்குற்றம் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு பங்குபற்றல் என்ற அடிப்படை வாக்குறுதியிலிருந்து இலங்கை அரசாங்கமானது விலகாதிருக்க, உறுப்பு நாடுகள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்

24 ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க வேண்டும்


## இலங்கையிடம் உறுப்பு நாடுகள் வலியுறுத்து

## ஐ.நா சொல்வதில் நியாயம் உண்டு!

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள கருத்தை தாம் ஏற்றுக் கொள்வதாக நவ சமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு



(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் அனைத்தும் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான உள்ளக விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் பங்களிப்பு மிகவும் கட்டாயமாக இடம் பெற வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

20ஆம் பக்கம் பார்க்க....


இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இலங்கை தொடர்பில், மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள கருத்துகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் குற்றச்சாட்டுகளை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து

24ஆம் பக்கம் பார்க்க....

## 4 ஆர்.பி.ஜி செல்கள் மீட்பு!



23ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கத்தை பலப்படுத்த ஐ.தே.கவில் இணைகிறேன்-சரத்



நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு தற்போதைய அரசாங்கத்தை மேலும் பலப்படுத்தும்

24ஆம் பக்கம் பார்க்க....


க.பொ.த (உ/த)

பரீட்சை

மாதிரி வினாத்தாள்

பொருளியல் I



உள்ளே...


## 25 வருட முகாம் வாழ்வு முடிவு சிதம்பரபுர முகாம் மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டன



23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் முகாமில் அகழ்வுப்பணி தோல்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த பகுதியில் ஆயுதங்களைத் தேடி, நேற்று வியாழக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியானது எவ்வித பலனுமும் இன்றி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஈழ அகதிகள் தொடர்பில் இணைந்த வேலைத்திட்டம்!

### ஆரம்பிப்போம் என சி.வி உரை

(குருமன்காடு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் ஈழ அகதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் வட மாகாண சபையும் இணைந்த ஒரு வேலைத் திட்டத்தை விரைந்து ஆரம்பிக்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிதம்பரபுரம் குடியேற்ற கிராம மக்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் மற்றும் தற்காலிக வீட்டுத்திட்டம் வழங்கும் வைபவம் நேற்றையதினம் வவுனியாவில் நடைபெற்றது. அதில் கலந்து

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரதியமைச்சர் பாலித்த தேவரப்பெரும தற்கொலைக்கு முயற்சி

(கொழும்பு)

பிரதி அமைச்சர் பாலித்த தேவரப்பெரும நேற்று தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார்.

மத்துகமை பகுதி பாடசாலை ஒன்றிலேயே பிரதி அமைச்சர் பாலித்த தேவரப்பெரும நேற்று தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார். இதன்போது அங்கிருந்தவர்களால் காப்பாற்றப்பட்ட அவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது ஆதரவாளர்களின பிள்ளைகளுக்கு பாடசாலையில் அனுமதி வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் புதன்கிழமை அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்தநிலையில் தமது கோரிக்கைக்கு இதுவரையில் உரிய பதில் கிடைக்கவில்லை என தெரிவித்தே தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## பேருந்து கட்டண அதிகரிப்பு தேவை

(கொழும்பு)

பேருந்து கட்டணங்களானது 6 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய செலவீனங்கள் பேருந்துகளை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டினை முனவைத்தார்.

இதற்காக தாம் போராட்டங்களில் ஈடுபடப்போவதில்லை எனவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான தீர்வினை வழங்குமாறும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (செ-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது புவியியற்றுறை பேராசிரியர்
ஏ.எஸ். சூசை ஆனந்தன் அவர்களின் தாயார்

**திருமதி அகஸ்ரின் பபியோலா குருஸ்**

**அவர்கள் 30.06.2016 வியாழக்கிழமை காலமானார்.**

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா வங்காலை புனித ஆனாள் அன்னையின் திருப்பாதங்களில் இளைப்பாறுதலடையவும் பிரார்த்திக்கின்றோம்**

**புவியியல் மற்றும் திட்டமிடல் சமூகம்,**
**புவியியற்றுறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

(5098)


கர்ப்பிணித் தாய்மார்களுக்கான
ஓர் நற்செய்தி!



உங்கள் ரி.சி.ரியில் முதற்கட்டமாக யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட எதிர்கால செல்வங்களின் ஆரோக்கியத்திற்கான உணவு விநியோக ஆரம்பம்.

உங்கள் 2000 ரூபாய் உணவு முத்திரைக்கு தரமானதும் மலிவானதும் சுகாதாரமானதுமா உணவுகளை சத்துஉணவு ஆலோசகரின் அறிவுறுத்தலுக்கமைய ஒரே கூரையின் கீழ் சுயதெரிவு முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

ரி.சி.ரியில் உங்கள் உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதன் மூலம்.

1. உடனடி அன்பளிப்புக்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. தொடர்ச்சியாக 8 மாத கொள்வனவை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு இறுதியில் 500 ரூபாய் பெறுமதியான அன்பளிப்பு கூப்பன் வழங்கப்படும்.

**சிந்தியுங்கள் செயற்படுங்கள் எதிர்காலசந்ததியினரை மேம்படுத்துங்கள்.**

"அறப்பணியே முதற்பணி"

**T.C.T Multi Trade Centre,**
**No: 527, Navalar Road,**
**Nallur, Jaffna.**

**T.P. 021 745 1895**

(5063)


# சாவு அறிவித்தல்

# வேலுப்பிள்ளை செல்லத்துரை

## (முன்னாள் சாரதி CTB)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.445, இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட CTB செல்லத்துரை என செல்லமாக அழைக்கப்படும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை (முன்னாள் சாரதி CTB) அவர்கள் 30.06.2016 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - புஸ்பலீலாவதி தம்பதியினரின் மருமகனும், தவமணிதேவியின் (தேவி) அன்புக் கணவரும், கௌரிதேவி (தயா) (ஆசிரியர், புதுக்குடியிருப்பு R.C வித்தியாலயம்), சசிகரன் (சசி) (லண்டன்), விஜயதேவி (விஜி) (உதவி முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி), காலஞ்சென்ற குகராஜ் (ராஜ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செந்தில்நாதன், தயுநிசா, லோகேஸ்வரன் (லோகன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, முத்துலட்சுமி, இராசேஸ்வரி, செல்வவிநாயகமூர்த்தி (மூர்த்தி), தங்கேஸ்வரி, சரோஜாதேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவர்களான ரிசாந்தன், வர்சாயினி, அபிரா, சியான் மற்றும் சந்தோசினி (மலேசியா), ரிசோபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.445, இராமநாதபுரம்,**
**கிளிநொச்சி.**
**0768565325 / 0773544940**

**தகவல் :-**
**குடும்பத்தினர்.**

(C-5064)

# சரத் பொன்சேகா நேற்று ஐ.தே.கவுடன் இணைவு



முன்னாள் இராணுவ தளபதியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தார்.

இதன்பிரகாரம், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கட்சி பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ளார்.

சிறிகொத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில், பிரதமர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்த சரத் பொன்சேகா, ஜனநாயக கட்சியை கலைக்கப் போவதில்லை எனவும் அவரது கட்சியில் இருந்தபடியே வேறொரு கட்சியின் அங்கத்துவத்தைப் பெற யாப்பில் இடமளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)



# சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

## மனிதவுரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அதிகாரங்கள், பலங்களை உபயோகித்து செய்யப்படும் சித்திரவதைகள் தொடர்பாக கிடைக்கும் முறைபாடுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடுகம தெரிவித்துள்ளார்.**

கடந்த வருடம் இது தொடர்பாக 413 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும், இந்த வருடத்தின் ஆரம்ப பகுதியில் 43 முறைபாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நபர்கள் காணாமல் போனமை தொடர்பாக அண்மையில் முறைபாடுகள் கிடைக்கவில்லை. சித்திரவதை தொடர்பான முறைபாடுகளும், பொலிஸாரின் பராமரிப்பில் உள்ள போது செய்யப்படுகின்ற சித்திரவதை தொடர்பிலான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும், அரசியரமைப்புக்கு அமைய சித்திரவதைகளை தடுக்கும் உரிமை மக்களுக்கு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.எந்தவொரு சித்திரவதையையும் யாராலும் நியாயப்படுத்த முடியாது.

பிரச்சினையான சந்தர்ப்பங்களில் கூட சித்திரவதைகளை நியாயப்படுத்த முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடுகம மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஐரோ.மீன் ஏற்றுமதி தடைநீங்கியதும்

# 7 நாட்களில் மட்டும் 78 தொன் ஏற்றுமதி

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதி தடை நீக்கப்பட்டதன் பின்னர் கடந்த ஏழு நாட்களில் 78 தொன் மீனினை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளுக்கு இலங்கை ஏற்றுமதி செய்த மீன்கள் தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 13 நிறுவனங்கள், 96 தடவைகளில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 78 தொன் மீன்களை ஏற்றுமதி செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை மீன் ஏற்றுமதி செய்வதற்கு பல நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஜப்பான் நாட்டு வாகனங்களின் இறக்குமதி விலை அதிகரிப்பு

ஜப்பானிய இறக்குமதி வாகனங்களின் விலைகள் மீண்டும் ஒருமுறை அதிகரிக்கவுள்ளன. அந்நாட்டு நாணயத்தின் உயர்வு காரணமாகவே இந்த நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதியாளர் சம்மேளன தலைவர் மகிந்த சரத்சந்திர இதனை தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய யென்னின் பெறுமதி ரூபாவுக்கு எதிராக 1.45 ஆல் உயர்ந்துள்ளது.

எனவே இறக்குமதி வாகனங்களின் விலைகள் 3 இலட்சம் முதல் 4 இலட்சம் வரை அதிகரிக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

இதன்படி மோட்டார் கார், ஜீப் மற்றும் வான்களின் விலைகள் இவ்வாறு அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# பாவனையாளர் நலன்கருதி யாழில் முறைப்பாட்டுப் பிரிவு

பாவனையாளர் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் புதிய முறைப்பாட்டுப் பிரிவொன்று ய்ாழ்.மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாவனையாளர்கள் வர்த்தக நடவடிக்கையில் ஏமாற்றப்படுதல் மற்றும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு விரைவில் சிறந்த நிவாரணம் · மற்றும் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு உடனடியாகவே குறித்த முறைப்பாட்டு பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது தனது சேவையினை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாவனையாளர் முறைப்பாட்டுப் பிரிவு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


அந்த வகையில் யாழ். மாவட்ட செயலகத்தில் குறித்த பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அரச அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்த முறைப்பாட்டுப் பிரிவு இயங்கவுள்ளது. மேற்படி முறைப்பாட்டுப் பிரிவுக்கு பொறுப்பாகப் புலனாய்வு அதிகாரி மு. றம்ஸீன், புலனாய்வு அதிகாரி ம.பிரியங்கன் மற்றும் அபிவிருத்திஉத்தியோகத்தரானந.சிவரூபன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாவனையாளர்கள் தமது முறைப்பாடுகளை 021 321 90 00 மற்றும் 077 013 9307 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டுதெரிவிக்கமுடியும்.

மேலும் Jaffd.caa@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் நேரடி மற்றும் தபால்மூல முறைப்பாடுகள் எனின் மாவட்ட இணைப்பதிகாரி, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை யாழ்.மாவட்ச்செயலகம் என்ற முகவரியூடாக தொடர்புகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கத்திற்கு பாவனையாளர்கள் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ஆணையாளரின் அறிக்கை ஏமாற்றமளிக்கிறது



(ஜெனீவா)

பொறுப்புக்கூறும் பொறிமுறை உள்ளிட்ட ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றும் பல்வேறு விடயங்களில் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வரும் இலங்கையின் நடவடிக்கைகளில், ஐ.நா மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் நம்பிக்கை கொள்ளும் வகையில் செயிட் ராத் அல்ஹுசைனின் அறிக்கை அமைந்திருப்பது ஏமாற்ற மளிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் தனது வாய்மொழி மூலமான அறிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றியதன் பின்னர் ஜெனீவாவில் வைத்து நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். (இ-10)

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட 3பேர் நேற்று பிணையில் விடுவிப்பு

சதொச பணியாளர்கள் சிலரை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினார்கள் என குற்றம் சாட்டப்பட்ட முனனாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட மூன்று பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சதொச ஊழியர்களை அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தினார்கள் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சதொசவின் முன்னாள் தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கமைய தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீர பிணைகளிலும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தவறு செய்தவர்களை பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை-ரணில்

தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் அவர்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய வங்கி ஆளுநர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை கோப் குழு முன்னெடுத்து வருவதாகவும் அவர குற்றவாளியாக நிரூபிக்கப் பட்டால் அவர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

தேசிய தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின்படி அர்ஜுன் மகேந்திரன் நிரபராதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-10)

# இலங்கை அணியை வீழ்த்தி தொடரை வென்றது இங்கிலாந்து

## ஜாசன்ராய் சதம்



இலங்கை அணிக்கு எதிரான 4-வது ஒருநாள் போட்டியில் ஜாசன் ராய் அதிரடியால் இங்கிலாந்து 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதிய 4-வது ஒருநாள் போட்டி ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்தப் போட்டியில் மழை குறுக்கிட்டதால் 50 ஓவரை கொண்ட இந்த போட்டி 42 ஓவராக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் மோர்கன் முதலில் பந்துவீச முடிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர்களாக குஷால் பெரேரா, குணத்திலக களமிறங்கினர்.

குஷால்பெரேரா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இதன் பின்னர் ஜோடி சேர்ந்த குணத்திலக, குஷால் மெண்டிஸ் நிதானமாக ஆடினர்.

இதனால் இருவரும் அரை சதம் விளாசினர். குஷால் மெண்டிஸ் 77 ஓட்டங்களும், குணத்திலக 62 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 135 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து ஜோடி சேர்ந்த சந்திமாலும், அணித்தலைவர் மத்தியூஸூம் அபாரமாக ஆடினர். சந்திமால் அதிரடியாக ஆடி அரைசதம் கடந்தார். மத்தியூஸூம் தனது பங்கிற்கு அரைசதம் விளாசினார்.

சந்திமால் 63 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டமிழந்தார். பிரசன்னா (9) நிலைக்கவில்லை. 42 ஓவர்கள் முடிவில் இலங்கை 5 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட்டங்கள் குவித்துள்ளது.

அணித்தலைவர் மத்தியூஸ் 67 ஓட்டங்களுடனும், தசன் ஷனக 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பில், டேவிட் வில்லி, அடில் ரசிட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 306 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கியது இங்கிலாந்து அணி.

தொடக்க வீரர்களாக ஜாசன் ராய், மொயீன் அலி களமிறங்கினர். மொயீன் அலி 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஜாசன் ராய், ஜோ ரூட் நிதானமாக ஆடினர். ஜோ ரூட் (65) சிறப்பாக ஆடி அரைசதம் அடித்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை தொடர்ந்த ஜாசன் ராயும் அரைசதம் அடித்தார். அணித்தலைவர் இயன் மோர்கன் 22 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். தொடர்ந்து அதிரடியாக ஆடிய ஜாசன் ராய் சதம் விளாசினார். அவர் 118 பந்தில்13 பவுண்டரி, 3 சிக்சர்கள் உட்பட 162 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் பிராஸ்டவ் 29 ஓட்டங்களும், பட்லர் 17 ஓட்டங்களும் எடுக்க இங்கிலாந்து 40.1 ஓவரில் 4 விக்கெட் இழந்து 309 ஓட்டங்கள் பெற்று 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இலங்கை பந்துவீச்சாளர்கள் அனைவரும் ஓட்டங்களை வாரி வழங்கினர். நுவன் பிரதீப் 78 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (க)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
சேகரன் சிவகுமரன்
விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில்
வெற்றி பெற்று 2016.06.28
அன்று கல்வி அமைச்சர் கௌரவ
அகிலவிராஜ் காரியவசம்
அவர்களிடம் இருந்து பரிசுபெற்ற
எமது கல்லூரியின் மாணவன்
செல்வன் சேகரன் சிவகுமரன்
அவர்களையும் அவருக்கு
பயிற்சியளித்த ஆசிரியரையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி
சமூகம்.


# விம்பிள்டன் டென்னிஸ் 3-வது சுற்றில் பெடரர்



லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மூன்றாம் சுற்றுக்கு ரோஜர் பெடரர் முன்னேறி உள்ளார்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் 3-ம் நிலை வீரரும், 17 கிராண்ட்சிலாம் வென்றவருமான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 2-வது சுற்றில் இங்கிலாந்தின் தகுதி சுற்று வீரர் மார்கஸ் வல்லிசை சந்தித்தார். இதில் பெடரர் 6-0, 6-3, 6-4 என்ற நேர்செட்கணக்கில் வென்று 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

இதேபோல நடப்பு சாம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான ஜோகோவிச்சும் (செர்பியா) 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் 7-ம் நிலை வீராங்கனை பெலிண்டா பென்சிக் (சுவிட்சர்லாந்து) - பிரன்கோவா (பெல்ஜியம்) மோதினார்கள். இதில் பெலிண்டா 6-2, 6-3 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் 3-ம் நிலை வீராங்கனை ரட்வன்சிகா (போலநது), பவுச்சர் (கனடா), ஜோகன்னா (இங்கிலாந்து) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

நேற்றுமுன்தின ஆட்டமும் மழை யால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த ஆட்டங்கள் நேற்று நடத்தப்பட்டது. (க)

# றியோ ஒலிம்பிக் போட்டிக்கு மைக்கல் ஃபெல்ப்ஸ் தகுதி

சாதனை நாயகனாக ஐக்கிய அமெரிக்காவின் நீச்சல் வீரரான மைக்கல் ஃபெல்ப்ஸ், றியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ளார்.

இதன்மூலம், மேலும் பல சாதனைகளை அவர் படைப்பா ரென்ற எதிர்பார்ப்புக் காணப்படுகிறது.

2000ஆம் ஆண்டு சிட்னியில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 15 வயது இளைஞனாகத் தகுதி பெற்ற ஃபெல்ப்ஸ், அந்த ஒலிம்பிககில் பதக்கமெதனையும் பெறாத போதிலும், 5ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர், தனது திறமைகளை வெளிக்காட்டத் தொடங்கிய அவர், இதுவரை 4 ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி, 18 தங்கங்கள் உட்பட 22 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

இது, ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கங்கள், அதிக தங்கங்கள் ஆகியவற்றுக்கான சாதனையாகும்.

இந்நிலையில், அமெரிக்காவின் தகுதிகாண் போட்டிகளில் 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டிகளில் தகுதிபெற்றுள்ளார்.

இதன்மூலம், தனது 5ஆவது ஒலிம்பிக்கில் பங்குபெறவுள்ளார். 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக்கோடு ஓய்வுபெறுவதாக அறிவித்த ஃபெல்ப்ஸ், பின்னர் குடித்துவிட்டு வாகனமோட்டியமைக்காகக் கைது செய்யப்பட்டுமிருந்தார்.



எனினும், அவற்றிலிருந்து மீண்டு வந்துள்ள அவர், மேலும் அதிக பதக்கங்களைப் பெறும் எதிர்பார்ப்புடன் காணப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# யோஷித மீதான விசாரணை நிறுத்தம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மகன் லெப்டினன் யோஷித ராஜபக்ஷ தொடர்பில் கடற்படையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்கு விசாரணைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

யோஷிதவின் சட்ட விரோதமான வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பில் கடற்படையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வழக்கு விசாரணையே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள யோஷித தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்குகள் நிறைவடையும் வரையிலேயே இந்த வழக்கு விசாரணைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் அக்ரம் அலவி மேலும் தெரிவித்தார். (இ-10)



# ‘ஒழுக்கமான சாரதிகளை உருவாக்குவோம்’ சாரதிகளுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை யாழ். மாவட்டச் செயலகத்துடன் இணைந்து நடத்தும் ஒழுக்கமான சாரதிகளை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் அமைந்த சாரதிகளுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது. (இ-5)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்-சங்குவேலி விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும். விநாயகர் முன்பள்ளி போஷகர் தே.திருமுருகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி.குமாரவேல், சங்குவேலி ஜே/187 கிராம சேவையாளர் ஆ.ரஜீவன், சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### கலை முதற் தேர்வு-2013 (வெளிவாரி) மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்பட்ட கலை முதற் தேர்வு-2012 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 29.07.2016 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக்கட்டணம் ரூபா 500/- ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/-இற்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 70/-பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

முக்கிய குறிப்பு: கலைமாணிக் கற்கைநெறி தொடர்பாக கல்வியாண்டு 2011/2012 இல் இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை (Semester based Course Unit System and Grade Point Average evaluation) அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் ஏற்கனவே கலைமாணிக் கற்கை நெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கலைமாணிக் கற்கைநெறி தொடர்பான பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம், பழைய பாடத்திட்டத்தின் கீழான கலைமுதற் தேர்வு மீள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு மேலதிகமாக இன்னுமொரு சந்தர்ப்பம் மட்டுமே வங்கப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். மேலதிக விபரங்களைப் பெறவிரும்வோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
30.06.2016

(சி-5062)

யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா? வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776
(மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியாவில்
(024) 324 4444
புதன் பி.ப. 2.00 - 6.00 மணி
ஞாயிறு காலை 9.00 - 1.00 மணி

(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜி
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.

## இராசி பலன்

01.07.2016
(ஆனி 17, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.24 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 11.21 மணிவரை
சுபநேரம் 5.56-7.26 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
கார்த்திகை விரதம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி காலை 6.24 இற்கு இடப-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காண்பீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**மேடம்** காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்கள் கூட வெற்றி கிடைக்கும்.

**இடபம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியங்களை சந்திக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செலவுகள் கூடும்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** நீங்கள் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன் வருவர், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**கன்னி** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பித்தசம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# ‘சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி’ யாழில் விழிப்புணர்வுப் பேரணி

**(யாழ்ப்பாணம்)**

**சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி என்னும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது.**

இந்தப் பேரணியானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் 3 ஆம் குறுக்குத் தெருவிலிருந்து பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி வேம்படி வீதி வழியாக யாழ். பொலிஸ் நிலையத்தினை அடைந்து வைத்தியசாலை வீதி வழியாக காங்கேசன்துறை வீதியை சென்றடைந்து அங்கிருந்து முற்றவெளியில் நிறைவடைந்தது.

பேரணியின் நிகழ்வுகளாக சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி எனும் தொனிப்பொருளில் நாடக நிகழ்வுகள், கருத்துரைகள் இடம்பெற்றன.

இப் பேரணியில் சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் மதத்தலைவர்கள், இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொலிஸார் சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)








(படங்கள்;- கு.கஜருபன்)






## சித்திரவதைகள் தொடர்பாக

# பொலிஸாருக்கு எதிராகவே அதிகளவு முறைப்பாடுகள்

## யாழ்.மனித உரிமைகள் இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் சித்திரவதைகள் தொடர்பாக பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் அமைப்பில் சித்திரவதைக்கோ மனிதாபிமானமற்ற இழிவான நடத்துகைக்கோ அல்லது தண்டனைக்கு எதிரான ஒரு உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குற்ற ஒப்பதல் அல்லது தகவலை சேகரித்தல் போன்ற நோக்கத்துக்காக அரச தரப்பால் செய்யப்படும் விடயம் சித்திரவதையாக கருதப்படுகிறது. அதாவது சித்திரவதை ஒரு குற்றமாக கருதப்படுகிறது. இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருந்தும் கூட சித்திரவதை தொடர்பல் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமே உள்ளன.

இந்த நிலையில் யாழில் சித்திரவதைக்கு எதிராக இந்த மாதம் 4 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முறைப்பாடுகள் குறைவாக பதிவு செய்யப்படுவதால் சித்திரவதைகள் குறைவாக உள்ளன எனக கருத முடியாது. சில இடங்களில் சித்திரவதைகள் நடைபெறுகின்றன. ஆனால் அவை அறிக்கையிடப்படுவதில்லை.

பொதுமக்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வு இல்லை. தமக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பயந்து பொதுமக்களோ சமூகப்பிரதிநிதிகளோ இதற்கு எதிராக செயற்படுவதில்லை. முறைப்பாடுகள் செய்யவில்லை.

பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவது தொடர்பில் சரா சரியான முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைதத வண்ணம் உள்ளன. அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்த வண்ணம் உள்ளோம். பல்கலைக் கழகங்களில் பகிடிவதை தொடர்பிலும் பல்வேறுபட்ட முறைப்பாடுகள் தொலைபேசியூடாக கிடைக்கின்றன. பெரும்பாலும் நேரடியாக கிடைப்பதில்லை கடந்த மாதங்களில் அநேகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

யாழ். பிராந்தியத்தில் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக அதிக முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. அதாவது பொலிஸ் நிலையத்தில் செய்யப்படும் முறைப்பாடுகள் சரியான முறையில் விசாரணை செய்யப்படுவதில்லை. இதுமுறைப்பாட்டாளர்களுக்கு தீர்வு வழங்குவதில் தாமதிப்பது, அச்சுறுத்துவது, மொழி உரிமை மீறப்படுதல், உடல் உளரீதியான சித்திரவதைகள் போன்றவை தொடர் பாக முறைப்பாடு கிடைக்கின்றன. அடுத்தநிலையில் கல்வித் திணைக்களங்களுக்கு எதிராகவே முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பிரிட்டன் வெளியேற்றத்தால் இலங்கைக்குப் பேராபத்து!

சமகாலத்தில் பிரிட்டனில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை பல்வேறு வடிவங்களில் இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என வர்த்தக சபையின் தல்லமை பொருளாதார நிபுணர் அனுஷ்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகி செல்ல அந்நாட்டு மக்கள் ஆதரவு வழங்கியுள்ள நிலையில், இலங்கை குறுகிய கால மற்றும் நீண்ட கால விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார்.

பிரிட்டன் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரான, சர்வதேச சந்தையில ஏற்ப்டுள்ள மாறுபடும் தன்மை, இலங்கைக்கு ஏற்பட்டுள்ள குறுகிய கால விளைவாக காணப்படலாம்.

இதன் காரணமாக இலங்கைக்கு வெளிநாட்டு நாணயத்தை ஈர்ப்பதற்கும் கடினமாக இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறான நெருக்கடி ஏற்படும் போதும் தங்களுக்கு தெரிந்த துறையில் முதலீடு செய்வதற்கே முதலீட்டாளர்கள் விருப்புகின்றமையே இதற்கு காரணமாகும்.

அமெரிக்க டொலர், அமெரிக்க திறைசேரி உண்டியல்கள், தங்கம் போன்றவற்றை நோக்கி அவர்கள் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

இதேவேளை, ஏற்றுமதி துறையினுள் இலங்கைக்கு நீண்ட கால விளைவுகளை சந்திக்க நேரிடும் என பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதியில் 10 வீதமானவை பிரிட்டனுக்கும் 30 வீதமானவை ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுவதே இதற்கான காரணமாகும். அதாவது கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் ஏற்றுமதிகளாகும்.

பிரிட்டனில் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலை, இலங்கையின் ஏற்றுமதியில் தாக்கம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதற்கு மேலதிகமாக இலங்கை பிரிட்டனுடன் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளுக்கு வரவுள்ளன.

ஜீ.எஸ்.பி. பிளஸ் போன்ற ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள ஒப்பந்தங்களில் தொடர்ந்து பிரிட்டன் நீடிக்காமையினால் இந்த நிலைமையில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால் இலங்கையின் ஏற்றுமதி சந்தையை விரிவாக்கப்பட வேண்டும்.

ஐரோப்பா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற சந்தைகளுக்கு 60% ஏற்றுமதி மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதி சந்தையை விரிவாக்குவதற்கு புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட வேண்டும்.

இதேவேளை, புதிய தலைமுறைகளுக்கான தொழில்நுட்பம் ஊடாக இந்த நாட்டின் ஏற்றுமதி போட்டியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவர்த்தகசபையின்தலைமை பொருளாதார நிபுணர் அனுஷ்க விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# முஸ்லிம் மக்களைப் புண்படுத்தும் ஞானசாரரை கைதுசெய்ய வேண்டும்

## அசாத் சாலி வலியுறுத்து

(கொழும்பு)

முஸ்லிம்மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் பேசி வரும் ஞானசார தேரரை அரசாங்கம் கைதுசெய்ய வேண்டும். மகிந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு இருந்த பிரச்சினை நல்லாட்சி அரசாங்கத்திலும் தொடர்கின்றது. ஆனால் அரசாங்கம் இதற்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஞானசார தேரர் நாட்டில் இனங்களுக்கிடையில் வன்முறையைத் தூண்டும் வகையில் மீண்டும் செயற்பட்டு வருகின்றார். கடந்த அரசாங்க காலத்தில் இவரின் இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே முஸ்லிம் மக்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களித்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இன முரண்பாடுகளைத் தூண்டும் வகையில் எந்த கூட்டங்களும் இடம்பெறக்கூடாது என சட்டம் கொண்டுவந்தது. ஆனால் ஞானசார தேரர் கடந்த ஆட்சியில் நடந்து கொண்டது போன்று மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளார்.

அண்மையில் ஞானசார தேரர் முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும்வகையில் உரையாற்றியுள்ளார். இதற்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கவில்லை. அத்துடன் சர்வதேச ரீதியில் 54 நாடுகள் இவரின் உரைக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் சகல இன மக்களும் தங்கள் மதவழிபாடுகளை சுதந்திராக மேற்கொள்ளும் சூழலை ஏற்படுத்துவதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது முஸ்லிம் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து எந்த தீர்மானமும் எடுக்காமல் இருக்கின்றது. அத்துடன் அரசாங்கத்தில் 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களும் இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் பேசவில்லை.

மகிந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ எந்தவித நடவடிக்கையும் எடுக்காதமையினால் அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வில் பெரும்பாலான முஸ்லிம்கள் அன்று கலந்துகொள்ளவில்லை. அதேபோன்றே இந்த அரசாங்கமும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளுக்கு நடவடிக்கை எடுக்கும்வரை அரசாங்கத்தின் எந்த தேசிய நிகழ்விலும் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது. அதனால் தான் ஜனாதிபதியின் இப்தார் நிகழ்விலும் கலந்துகொள்ளவில்லை. பிரதமரின் இப்தார் நிகழ்விலும் கலந்துகொள்ள மாட்டோம்.

எனவே அரசாங்கம் முஸ்லிம் மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் செயற்பட்டு வரும் ஞானசார தேரரை கைதுசெய்யவேண்டும். அத்துடன் இதன்பிறகும் இவ்வாறான வார்த்தை பிரயோகங்களை ஞானசாரதேரர் பிரயோகித்தால் உயிரை பணயம் வைத்தேனும் அவருக்கு எதிராக போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள்



அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணர் **திருமதி தர்சினி றஞ்சன்** அவர்களால், மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், முக அலங்காரம் போன்ற அலங்கார வகுப்புக்கள் (Workshop) நடாத்தவுள்ளன.

**வகுப்புக்கள்:- 03.07.2016 ஞாயிறு தொடக்கம் 08.07.2016 வெள்ளி வரை**

இலவச அறிமுக வகுப்புக்களும் அதனைத் தொடர்ந்து குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!

தொடர்புகளுக்கு:- திருமதி ***தர்சினி றஞ்சன்***

தொ. பே இலக்கம்
**071 110 3612**
**021 222 5158**
Email - harishi09@gmail.com

**179/5 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**


## அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**
**வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2016**

**மற்றும்**

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் ஆய்வு உத்தியோகத்தர் சேவையின் தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை–2016**

தமிழ்/ சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.07.27 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும் தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ.வரதலிங்கம்**
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(சி–5060)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா:10
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:Diploma/ தனியார் தொழில், கனடா
தொ.இ: B/6005

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32 செவ் 12 இல்
உயரம்: 5’9"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/6007

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திர்ம்: விசாகம்
கி.பா: 55 செவ் 1 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6009

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 7.75
உயரம்: 5’11"
தகைமை/தொழில்:ICT/அரச தொழில்
தொ.இ: B/6010

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 9 . உயரம்: 5’1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6022

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: ரேவ்தி
கி.பா: 34 செவ். 4இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/6025

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 47 சூரி.செவ் 8 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/6026

பிறப்பு: 1982 RC
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 46 செவ். 8 இல்
உயரம்: 5’10"
தகைமை/தொழில்:BBA/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6027

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் 35 பேருக்கு மொத்தம் 9 இலட்சத்து 58 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தகவல் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜூன் மாதம் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-307)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(புதுமுறிப்பு)

கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் 13 கஞ்சா செடிகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் கடந்த மாதம் 17 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது பிரஸ்தாப நபரை இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (2-307)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

பதினைந்து வயதுச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கர்ப்பமடைய வைத்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரை மேலும் பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி கரடிப்போக்குசந்திக்கு அண்மித்த பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் சிறுவர் இல்லம் ஒன்றிலே தங்கியிருந்து வெளியேறிய தாய் தந்தையர் அற்ற பதினைந்து வயது சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கி கர்ப்பம் அடையச்செய்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் கடந்த 14ஆம் திகதி இளைஞர் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த இளைஞரை நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்ட நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 13ஆம் திகதி வரை மேலும் பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-15)

### முல்லைத்தீவில் பண்ணை அமைக்க

# இராணுவத்தினர் 524 ஏக்கர் காணி வழங்குமாறு கோரல்

முல்லைத்தீவு மாவட்டதில் இராணுவத்தின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பண்ணை அமைப்பதற்காக 524 ஏக்கர் அரச காணியை வழங்குமாறு கோரிக்கை ஒன்றுவிடுக்கப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்களும் அதேநேரம் அரச காணிகளையும் இராணுவத்தினர் சுவீகரித்துள்ளனர். இந்நிலையில இராணுவத்தின் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் பணணை அமைப்பதற்காக,பிர தேச செயலகங்கள் ஊடாக விடுகப்பட்ட கோரிக்கைகள் தற்போது பரிசீலனைக்காக மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுவில அனுமதி பெறப்பட வேணடிய காணிகளின் விபரம் எனும் தலைப்பில் பாதுகாப்பு படைகளுக்கான பாரதீனப் படுத்துவதற்காக வழங்கப்படவுள்ள காணிகளின் விபரம் எனக் குறிப்பிட்டு பதின்மூன்று இடங்களில் காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முல்லைத்தீவு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பண்ணை அமைப்பதற்காக விசுவமடு கிழக்கில் 65 ஏக்கர் அரச காணியும், விசுவமடு மேற்கில் 25 ஏக்கர் அரச காணியும்,வேணாவில் 215 ஏக்கர் அரச காணியும், புதுக்குடியிருப்பு மேற்கில் 15 ஏக்கர் அரச காணியும்,உடையார் கட்டுவடக்கில் 9 ஏக்கர் அரச காணியும், சுதந்திரபுரத்தில் 8 ஏக்கர் அரச காணியும், உடையார் கட்டு தெற்கில் 75 ஏக்கர் அரச காணியும், உடையார்கட்டு தெற்கில் 10 ஏக்கர் அரச காணியும், தேவிபுரத்தில் 100 ஏக்கர் அரச காணியும், தேராவிலில் 5 ஏக்கர் அரச காணியும், வள்ளி புனத்தில் 2 ஏக்கர் அரச காணியும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உடையார்கட்டு வடக்கில் 2 ஏக்கர் அரச காணியும், உடையார்கட்டு தெற்கில் 4 1/4 ஏக்கர் அரச காணியும் கல்வி நிலையம் அமைப்பதற்காக கோரப்பட்டுள்ளது. (2-281)

## வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் படுகாயம்

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் நேற்று அதிகாலை விபத்து இடம் பெற்றுள்ளது, தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த வான் ஒன்று வீதியின் நடுவில் நின்ற மாட்டுடன் மோதியுள்ளது. குறித்த விபத்தின்போது எவ்வித




பாதிப்புகளும் ஏற்படவில்லை.இதே வேளை குறித்த விபத்து இடம்பெற்று சிறிது நேரத்தின் பின்னர் முறிகண்டி அறிவியல்நகர் சந்தியில் மற்றுமொரு விபத்து இடம்பெற்றது, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்தின் மீது, அதே திசையில் பயணித்த வெங்காயம் ஏற்றி சென்ற லொறி மோதியது, குறித்த விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

தொடர்ந்து குறித்த பகுதியில் விபத்தினால் சிதறிய சிதைவுகளை துப்புரவு செய்து கொண்டிருந்த நபர் மீது, கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியது. மோட்டார் சைக்கிள் மோதியமையால் துப்புரவு செய்து கொண்டிருந்த பிரதேசவாசி படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் படுகாயமடைந்துள்ளனர். மோடடார் சைக்கிள் செலுத்தியவர் கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு திணைக்களத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது,

விபத்து தொடர்பிலான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(2-15)

### நன்னீர் மீன்பிடி சங்க நிர்வாகத் தெரிவு

மருதமடு நன்னீர்மீன் பிடிச்சங்க நிர்வாகத் தெரிவு கடந்த 28 ஆம் திகதி இடம் பெற்றது. இதன்போது தலைவராக சிவலிங்கம் சூசைநாதர், செயலாளராக நீக்கிலஸ் நிக்சன, பொருளாராக சிவசண்முகம தங்கேஸ் வரன் தெரிவு செய்யபட்டனர். இதில் நீர்வாழ் உயிரினஙகள மற்றும் நீரியல் திணைக்களப் பணிப்பாளர் பெரண்டினா, அபிவிருத்தி சேவைகளின் இணைப்பாளர் எஸ். ஞானம், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர், கமக்கார அமைப்பினர், நீர்ப்பாசன திணைக்கள உறுப்பி னர்கள் மற்றும் கோமபாவில், கைவேலி ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-281)

## சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வாய்க்காலினுள் வீழ்ந்து தடம்புரண்டது



(புதுமுறிப்பு)

உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தில் இருந்து கிளிநொச்சி நகரை நோக்கி உருத்திரபுரம் வீதியில் சென்ற ஹயஸ் வாகனம் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து 6 ஆம் வாய்க்கால் பகுதியில் வீதியை விட்டு விலகி அருகாமையிலுள்ள ஆறு அடி பள்ள வாய்க்காலினுள் வீழ்ந்து தடம் புரண்டது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த வாகனத்தில் பயணித்த ஆறு பேர் வாகனத்தினுள் அகப்பட்டு சிறுகாயங்களுக்குள்ளானார்கள்.

இவ்கள் அனைவரும்பொது மக்களின் உதவியுடன் வாகனத்திலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

இதன் போது வாகனம் பலத்த சேதமடைந்தது. (2-254-307)

## பயணிப்பதற்கு பயன்படாதநிலையில் உருத்திரபுரம் வைத்தியசாலை வீதி

(புதுமுறிப்பு)

கிளிநொச்சி உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு செல்லும் வீதி போக்குவரத்துக்கு பயன்படாத வகையில் சேதமடைந்து காணப்படுவதாக வீதியால் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

சுமார் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாட தேவையின் நிமிர்த்தம் வெளி மாவட்டங்களுக்கும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று வருவதற்கு பயன் படுத்துகின்றனர்.



மழைகாலங்களில் குறித்த வீதி சகதி நிறைந்து காணப்படுவதால் வாகனங்கள் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் அவதியுறுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் வீதியை செப்பனிட்டுதர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-307)





விசுவமடு தென் இந்திய திருச்சபை முன்பள்ளியின் இவ்வாண்டுக்கான மழலைகள் விளையாட்டு விழா கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற போது....

(படங்கள்:-சோலைநகர் செய்தியாளர்)

# வீடொன்றில் இருந்து இளைஞன் சடலமாக மீட்பு

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட எமில் நகர் கிராம அலுவலகர் பிரிவில் உள்ள ஜீவபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த மரணம்கொலையா? தற்கொலையா? என்பது தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் றொபட் பெரேரா (வயது-17) என தெரியவந்துள்ளது. குறிதத இளைஞனின் தாய் வெளிநாட்டில் உள்ள நிலையில் தந்தை மற்றும் தம்பியுடன் வசித்து வந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் வீட்டில் நடைபெற்ற தகராறு காரணமாக வீட்டை விட்டு வெளியில் சென்றுள்ளார். கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நண்பர்களுடன் இருந்து விட்டு அன்றைய தினம் மாலை ஜீவபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் தனிமையாக தங்கியுள்ளார்.

குறித்த வீடு நான்கு நாட்களாக பூட்டிய நிலையில் இருப்பதாகவும் அவ்வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதாகவும் அயல் வீட்டார் நேற்று முன்தினம் காலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதன் போது விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வீட்டிற்கு வந்து சோதனையிட்ட போது தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. மன்னார் பொலிஸார் குறித்த இளைஞன் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டனர். சடலத்தை மன்னார் பொலிஸார் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத் துள்ளனர். (2-4)




# பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்விற்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர் அடங்கிய குழுவினரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வரவேற்றார். அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்ட குறித்த திணைக்களத்தினை இராஜாங்க அமைச்சர் திறந்து வைத்தார். தொடர்ந்து மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

திணைக்களத்தில் பணிபுரிவதற்கான நியமன கடிதமும், அலுவலக உபகரணங்களும் அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அதிகாரிகள், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். யுத்தம் காரணமாக கல்வியை தொடர முடியாத நிலையில் உத்தியோகங்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இதன் காரணமாக குடும்ப வருமானம் இல்லாமல் வாழ்ந்து வருவதாக தெரிவித்த அவர் இதுவரை 2 ஆயிரம் பேர் வரை தொழிற் பயிற்சிகளை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்தினை பொறுத்தளவில் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்களுற்காக காத்திருப்பது தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்த அவர், இவர்களின் வேலைவாய்ப்புக்களை பெறுக் கொடுத்து குடும்ப வருமானத்திற்கு உதவ வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

கிளிநொச்சி மாவட்டத்தல் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை பெறுக் கொடுப்பதற்காக இத்திணைக்களம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 3 மாதங்களிற்கு முன்னர் கிளிநொச்சியில் தொழில் திணைக்களத்தினை தறந்துவைத்ததாகவும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகளையும், இன்று (நேற்று) வியாழக்கிழமை வவுனியாவில் தொழிறசாலையினையும் திறந்து வைத்ததாக தெரிவித்தார்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், அதுவரை இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும், பிற மாவட்டங்களில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க உளளதாகவும் தெரிவித்தார். மாவட்டத்திற்கு தொழிற்சாலைகளை அமைக்கும் வரை தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். தற்போது வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்காக சிறிய அளவில அலுவலகம் ஒன்றினை அமைத்துள்ளதாகவும், மாவட்ட செயலகத்தின் 2 ஆவது கட்டடத் தொகுதி முடிக்கப்பட்டதன் பினனர் திணைக்களத்தினை விஸ்தரிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார். (2-15)




இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'மனித குலத்திற்கு எதிராக இடம்பெறும் சித்திரவதைகளைத் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பேரணி இடம்பெற்றது வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த பேரணி வவுனியா நகர் பகுதியூடாக நகர்ந்து மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தை சென்றடைந்தது. பேரணியில் பாடசாலை மாணவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இனத்திற்கு சொந்த நிலமில்லாமல் விடுதலை பற்றி பேசிவிட முடியாது

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு



(முகமாலை)

இனமொன்றுக்கு சொந்த நிலமில்லாமல் தமது விடுதலை பற்றி பேசிவிட முடியாது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். வேம்பொடுகேணிகிராமசேவையாளர் பிரிவில் இந்திராபுரம் கிராமத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த கிராமத்தை சேர்ந்த மக்கள் பதினெட்டு வருடங்களின் பின்னர் தமது கிராமத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன் போது மக்கள் சந்திப்பிற்காக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வருகை தந்தபோது இங்கு மக்கள் முன்பாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவக்கையில், இந்த முகமாலை பகுதியில் தான் உச்சகட்ட சமர் இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடம்பெற்றிருந்தது.

எமது காணிகளுக்குள் நாங்கள் செல்ல முடியாத நிலையே இப்போதும் இருந்து வருகின்றது. எனினும் எமது உறுதியினால் எமது காணிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக சென்று வருகின்றோம்.

இந்த நிலை மேலும் தொடர வேண்டும். இராணுவம் எமது காணிகளை பிடித்து வைத்துள்ளது, எமது காணிகளுக்குள் செல்ல விடுகின்றனர் இல்லை என்பதற்காக நாம் மனம் சோர்ந்து விடக்கூடாது. உறுதியுடன் இருக்க வேண்டும். இந்த உறுதி இந்த முகமாலை பிரதேசத்திலும் இருக்க வேண்டும்.

முகமாலையில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு தனியே மனிதர்களால் முடியாத நிலையில், இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு இப்போது தான் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

குறிப்பாக வடபகுதியில் மிதிவெடி அகற்றலில் ஏற்படும் தாமதத்திற்கு மூல காரணமாக நிதிப்பற்றாக்குறையே உள்ளது. அண்மையில் வடக்கிற்கு வந்த அமெரிக்க குழுவினர் மிதிவெடி அகற்றும் இடங்களை பார்வையிட்டு சென்றனர்.

இவர்கள் பார்வையிட்ட பின்னர் எமது கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தனையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர். இதன போது எமது மக்களின் மீள் குடியேற்றமே எமது முதலாவது தேவையாகவுள்ளது என அவர் வலியுறுத்தி இருந்தார். ஆகவே மிதிவெடி அகற்றலில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்தும் மீள்குடியேற்றம் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் முதல் தடவையாக இருநூறு மீற்றர் நிலப்பரப்பு விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்படும் இடத்தில் முதலில் நாங்கள் வந்து மீள்குடியேற வேண்டும். அவ்வாறு மீள்குடியேறினால்தான் நாம் எந்தளவிற்கு ஆர்வமாக உள்ளோம் என மற்றவர்களுக்கு புரியும். இதனமூலமே ஏனைய இடங்களை துரிதமாக பெற்றுக்கொள்ள முடியும் என்றார் (2-4)

# செல்வபுரம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி விற்பனை

## சிறுவர்களும் விற்பனையில் ஈடுபடுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தில் பாரியளவில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் 10இற்கு மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் குறித்த பகுதியில் கலாசார சீரழிவுகள் தலைதூக்கியுள்ளதாகவும் கிராம மக்கள்கவலைதெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தை அண்டி வாழ்கின்றவர்கள் கசிப்பு அருந்துவதற்காக நாளாந்தம் மேற்படி இடத்திற்கு வந்து கசிப்பினை அருந்திவிட்டு வீடுகளுக்கு சென்று தகராறுகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடந்தேறும் இடமானது சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு பின்புறமாகவும் வித்தியாலயத்திற்கு மிகவும் அருகில் காணப்படுவதாக கிராம மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அத்துடன் கசிப்பு விற்பனையில் பாடசாலை சிறார்களையும் ஈடுபடுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதிக்கு கடந்த காலங்களில் பொலிஸார் சிவில் உடையில் வருகைதந்து கைது செய்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் நடவடிக்கை குறைவடைந்து செல்வதாக தெரியவில்லையென பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இந்நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் கிராமத்தின் பொது அமைப்புக்கள் எவையும் முன்வராது இருப்பது கவலைக்குரிய விடயம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கசிப்பு உற்பத்தியினால் ஏற்படும் கலாசார சீரழிவுகளைத் தடுக்க பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒரு தடவை இவ்விடத்திற்கு வருகைதந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-27)

# ஆசிரிய தலைமைத்துவத்தின் தேவையும் அதன் பின்னணியும்



கலாநிதி த.கலாமணி
சிரேஷ்டவிரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

உலகு இயங்கிக் கொண்டிருப்பது; மாற்றம் காண்பது. உலகியல் மாற்றங்களுக்கான பிரதான கருவியாகவும் இம் மாற்றங்களை விசைப்படுத்தும் கருவியாகவும் கல்வி விளங்குகின்றது. கல்வியினால் உலகு மாற்றம் காண்கின்ற போது அம்மாற்றங்களை ஒட்டியதாக கல்வியின் நோக்கமும் போக்கும் உள்ளடக்கமும் முறையியல்களும் மாறவேண்டும். பாடசாலைக் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான முகவர்கள் ஆசிரியர்களே. மாற்றம் காணும் உலகில் தமது வகிபாகங்கள் குறித்து ஆசிரியர்களிடையே தெளிவு அவசியம்.

**தலைப்புத் தெரிவுக்கான பின்னணி**

இன்றைய பாடசாலைகளில் நிலவும் பல குறைபாடுகள் ஆசிரிய தலைமைத்துவத்தினாலேயே தீர்க்கப்படமுடியுமென நம்பப்படுகிறது. மாணவர் கற்றலுக்காக தமது வகுப்பறைகளில் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற ஆசிரியர்களே இன்றைய பாடசாலைகளின் தேவை ஆகும். ஆனாலும் ஆசிரிய தலைமைத்துவம் என்பது வகுப்பறையோடு மட்டும் நின்று விடக்கூடாது. அதற்கும் அப்பால் பாடசாலைக்கும் சமுதாயத்திற்கும் தொழில் வாண்மைக்கும் அது விரிவுபடுத்தப்பட வேண்டும். ஆசிரிய வாண்மைத்துவம் பற்றிய புதிய கருத்துக்கள் உருவாகியுள்ள நிலையில் ஆசிரியத் தொழில் குறித்த பழைய சிந்தனைகள் இன்று மாற்றம் பெற்றுள்ளன. இப்புதிய சிந்தனைகள் முன்னெடுக்கப்படுவதற்கு ஆசிரிய தலைமைத்துவம் முக்கிய பங்களிப்புச் செய்யவல்லது.

**ஆசிரிய மாற்றமும் கல்வி விருத்தியும்**

ஆசிரிய மாற்றம் என்பது இன்று பல்வேறு கல்விசார் ஆய்வரங்குகளின் முக்கிய கருப்பொருளாக விளங்குகின்றது. பொதுவாகவே கல்வி பற்றியோ, கல்வி நடைமுறைகள் பற்றியோ கருத்துச் சொல்வதற்கு எவரும் தயங்குவதில்லை. கல்வியின் வெகுசனப் பண்பானது கல்வி குறித்து எவருமே கருத்துரைக்கலாம் என்ற தைரியத்தை வழங்கிவிடுகின்றது.

இந்நிலைமை குறித்து ஹார்கிறீவ்ஸ் (Hargreaves ) எனும் கல்வியியலாளர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

ஆசிரியர்கள் மாற்றமுற வேண்டும் என மக்கள் எப்போதும் விரும்புகிறார்கள். அண்மைக் காலங்களில் இக்குரல் அதிகமாக ஒலிக்கிறது. இன்றைய கோளமயமாக்கற் போட்டி நிலைகளில் எங்கள் நாடுகளில் எமது எதிர்காலச் சந்ததியினரை நாம் எவ்வாறு உருவாக்கப்போகின்றோம் என்ற அச்ச உணர்வு எம்மிடம் இன்று உள்ளது. பொருளாதாரம் குறித்து ஒரு சிலர் அதிகமாகப் பேசுகின்ற போதிலும் அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் பொது மக்களும் என எல்லோரும் கல்வி பற்றி ஏதாவது சொல்ல விரும்புகின்றார்கள்.

ஹார்கிறீவ்ஸ் என்பாரின் இக்கூற்று ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியது. ஒருநாட்டின் அல்லது சமுதாயத்தின் கல்வி விருத்தி என்பது எழுந்தமானமாக, ஒரு நோக்கத்திற்காக திடீரென மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கை (Ad hoc activity) அன்று. அது நன்கு திட்டமிட்ட முறையிலே நேற்றைய அனுபவங்களின் அடிப்படையில் இன்றைய நடைமுறைகளைப் பரிசீலனை செய்து நாளைய உலகுக்கான தூரநோக்குடன் முன்னெடுக்கப்படவேண்டிய ஒன்று. இதுவே எதிர்காலவியல் நோக்கமாகும்.

கல்வியே ஒரு நாட்டின் சகல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒரு நாட்டின் தலா வருமானம் அறிவுபூர்வமான, திறனாற்றல்




வாய்ந்த மனிதவலுவில் தங்கியுள்ளது. மனிதவள விருத்திக்கான அவசியத்தை உணர்ந்து நாடுகள் பலவும் தரமான கல்வியைத் தமது நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்க முன்வந்துள்ளன. கல்வியே ஒருவரில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது, ஒருவர் ஒன்றைக் கற்றுக் கொண்டமையின் வெளிப்பாடாக அறிவிலும் திறனிலும் மனப்பாங்கிலும் அவர் புலப்படுத்துகின்ற, ஓரளவுக்கு நிலையானதும் தொடர்ச்சியானதுமான நடத்தை மாற்றம் அமையும். அனுபவங்களும் உயர் மானுடப் பண்புகளும் கலாசார விழுமியங்களும் சமூகப் பெறுமானங்களும் கல்விக்கூடாகவே சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

**ஆசிரியர்களுக்கு வலுவூட்டல்**

ஆசிரியத் தொழில் இன்று ஓர் உயர் தொழிலாக, வாண்மைத் தொழிலாக (Profession) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொறியியல், மருத்துவம், சட்டம் என்பன போன்று ஆசிரியமும் ஓர் உயர் தொழிலாகக் கொள்ளப்படுதல் ஆசிரியத் தொழிலுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். ஆனாலும் ஆசிரியத் தொழில் ஒரு வாண்மையாகக் கொள்ளப்படும் அளவுக்கு ஆசிரியர்கள் இன்று நன்கு மதிக்கப்படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு எம்மிடையே உண்டு. இக்குற்றச்சாட்டிலிருந்து விடுபட வேண்டுமாயின் ஆசிரியர்கள் உயர்தொழில் தகையாளர்களாக விளங்கும் வகையில் அவர்களுக்கு வலுவூட்ட வேண்டியது அவசியமாகும். இவ்வலுவூட்டலுக்கான நிகழ்ச்சித்திட்டம் வாண்மையின் பண்புகளைத் தெளிவுபடுத்துவதாகவும் வலியுறுத்துவதாகவும் வாண்மையாளர்களாக விருத்தி அடைவதற்கான பயிற்சிகளையும் திறன்களையும் வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

**வாண்மையின் பண்புகள்**

உயர்தர பயிற்சியையும் உயர் உளத் தொழிற்பாடுகளையும் வேண்டி நிற்கின்ற தொழிலே வாண்மையாகும். ஒரு தொழிலானது வாண்மைத் தொழிலாகக் கொள்ளப்படுவதற்கு குறிப்பான இரு பண்புகளை அது கொண்டிருக்க வேண்டும் என்பர்.

01. அறிவை அடிப்படையாகக் கொண்டிருத்தல் (Knowledge-based)

02.வாடிக்கையாளரை அல்லது சேவை பெறுநரை மையப்படுத்தியதாக இருத்தல் (Client- centered)

இவ்விரு பண்புகளுடன் பின்வரும் பண்புகளும் வாண்மைத் தொழிலின் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றன.

❖ குறித்த தொழிற்றுறை பற்றிக் கற்பதற்கான வாய்ப்புக்கள் இருத்தல்

❖ குறித்த வாண்மைக்கென தனித்துவமான பயிற்சி அளித்தல் காணப்படல்

❖ துறைசார் மொழிப் பிரயோகம் காணப்படல்

❖ குறித்த வாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தப் படுவதற்குப் பொருத்தமான தகைமைச் சான்றிதழைக் கொண்டிருத்தல்.

❖ அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான கல்வி நெறிகள் காணப்படல்

❖ வாண்மைத்துவக் கழகம் ஒன்றில் உறுப்புரிமை பெறக் கூடியதாக இருத்தல்.

**ஆசிரிய வாண்மையாளர் பண்புகள்**

ஆசிரிய வாண்மையாளர்களிடம் எதிர்பார்க்கப்படும் முக்கியமான பண்புக்கூறுகள் தேர்ச்சி, செயலாற்றுகை, நடத்தை என்பனவாகும். தேர்ச்சி என்பது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தயார்நிலை. முழுமையான பாடப்புல அறிவு, வினைத்திறன் மிக்க கற்பித்தல் நுட்பங்களைப் பிரயோகித்தல் போன்றவற்றை உள்ளடக்கும். தேர்ச்சிகளின் வெளிப்பாடாக பணியில் விசேடத்துவம், பொருத்தமான நுட்ப முறைகள், தொழில்நுட்பம் பற்றிய அறிவு, வாண்மைத்துவ சேவையின் ஒழுக்கக் கோவைக்கான நடத்தைசார் அமைப்பு, சேவையைப் பெறுவோரின் நம்பிக்கையை சிதையாமல் செயற்படல், தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப்புடன் செயற்படல் போன்றவை வாண்மையாளர் ஒருவரிடம் காணப்படல் வேண்டும்.

ஆசிரிய வாண்மையில் செயலாற்றுகை என்பது கற்பிக்கும் ஆற்றலைக் குறிப்பதாகும். மாணவர் பற்றிய உளவியல்சார் அறிவு, பாடப்புல அறிவு, முறையியல் பற்றிய அறிவு, மாணவ மதிப்பீடு செய்யும் ஆற்றல், சுய மதிப்பீடு செய்யும் ஆற்றல் போன்றவற்றில் கற்பிக்கும் ஆற்றல் தங்கியுள்ளது.

தொழில் வாண்மையில் நடத்தை என்பது வாண்மையாளரின் தோற்றம், நடை, உடை, குரல்வளம், தொனி, கற்பித்தல் பாணி என்பவற்றைக் குறிப்பதாகும். ஆசிரிய வாண்மையாளர் இந்நடத்தைகளில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

இவ்வகையில் ஆசிரியத் தொழில் ஒரு வாண்மைத்துவத் தொழிலாகக் கொள்ளப்படும் நிலையில் வாண்மைத்துவப் பயிற்சியானது இரு நிலைகளில் நோக்கப்பட வேண்டும். அதாவது தொடக்க நிலையில் முன்சேவைப் பயிற்சியாக வழங்கப்படும் வாண்மைத்துவப் பயிற்சி, பணியிடைப் பயிற்சியாக வழங்கப்படும் தொடருறு வாண்மைத்துவப் பயிற்சி ஆகிய இரண்டுமே ஆசிரியர் கல்விக்குரிய இரு நிலைகளாகும்.

**அத்தியாவசிய வாண்மைத்துவத் தராதரங்கள்**

ஆசிரிய வாண்மைத்துவத் தொழிலில் அத்தியாவசிய வாண்மைத் தராதரங்கள் பேணப்படுவதை உறுதிசெய்து கொள்வதற்காக சில கல்வி அதிகார பீடங்கள் நெறிமுறைகளை விருத்தி செய்துள்ளன. அவ்வாறான வாண்மைத் தராதரங்களாகக் கொள்ளப்படத்தக்கவை.

1.ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களில் போதிய அறிவுடையவர்களாக இருக்க வேண்டும்.

2.பிள்ளைகளின் வளர்ச்சி பற்றியும் விருத்தி பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும்.

3. பிள்ளைகள் வெவ்வேறு முறைகளில் கற்றுக் கொள்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

4.பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என அறிந்திருக்க வேண்டும்.

5.வகுப்பறையை எவ்வாறு முகாமை செய்ய வேண்டுமென அறிந்திருக்க வேண்டும்.

6.சிறந்த தொடர்பாடல் மேற்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

7.வெவ்வேறு பாடங்களைத் திட்டமிடக் கூடியவராக இருக்க வேண்டும்.

8.மாணவர் முன்னேற்றத்தைச் சோதித்தறியக்கூடியவராக இருக்க வேண்டும்.

9.தம்மைதாமே சுய மதிப்பீடு செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

10.பிற ஆசிரியர்களுடனும் சமூகத்துடனும் ஊடாட்டம் உள்ளவராக இருக்க வேண்டும்.

# அமெரிக்க படைகளின் தாக்குதலில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் 250 பேர் பலி

(ஈராக்)

**இஸ்தான்புல் சர்வதேச விமான நிலைய தாக்குதல் நடந்து 24 மணித்தியாலங்களுக்கும் 250 ஐ.எஸ். பயங்கரவாதிகளை குண்டு வீசி கொன்று விட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.**



எனினும் இது குறித்து தகவல்கள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. ஈராக் நகரமான பலூஜா, ஐ.எஸ். பயங்கரவாதிகள் வசம் உள்ளது. ஆனால் இதை மீட்டு விட்டதாக அமெரிக்கா தலைமையிலான ஈராக் ஆதரவு படைகள் கூறி வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் பலூஜாவில் இருந்து வெளியே சென்று கொண்டிருந்த ஐ.எஸ். வாகன அணிவகுப்பின் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசி தாக்கியதாகவும். அதில் 250 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்கா மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் 40 வாகனங்கள் முற்றிலும் சேதமடைந்து விட்டதாகவும் அவர கூறியுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்காவின் போர் நடவடிக்கைகளை குறித்து சிஐஐஎஃப் நிறுவனர் ஜான் பிரணன் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அறிக்கை தாக்கல் செய்தார். அதில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் சர்வதேச அளவில் விரிவடைந்து வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், இதை ஒடுக்க அமெரிக்க இராணு வம் விரைவில் தாக்குதலை தீவிரப்படுத்தும் எனக் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில் பலூஜா தாக்குதல் நடந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டால் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு எதிர்கொண்ட மிகவும் மோசமான அழிவாக இது இருக்கும் என மத்திய ஆசிய அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## மலாலாவின் புத்தகம் அமோக விற்பனை



தலிபான்களால் தலையில் சுடப்பட்டு உயிர் தப்பிய பாகிஸ்தான் சிறுமி மலாலா, தனது அனுபவங்களைப் பற்றி எழுதிய புத்தகம் மற்றும் சொற்பொழிவுகள் வாயிலாக கோடீஸ்வரராகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

18 வயதாகும் மலாலா, பிரிட்டனில் வசித்து வருகிறார்.

பாகிஸ்தானில் அவர் இருந்தபோது பெண் கல்விக்காக அவர் குரல் கொடுத்து வந்த காரணத்தால் தலிபான் பயங்கரவாதிகள் அவரது தலையில் சுட்டனர்.

எனினும், பிரிட்டன் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட மலாலா, அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்தார்.

அதையடுத்து, பெண் கல்வி குறித்து அவர் பிரசாரம் மேற்கொண்டு வந்தார். அவருக்கு 2014 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த நிலையில் தனது அனுபவங்கள் குறித்து "ஐ யாம் மலாலா" என்ற புத்தகத்தை அவர் எழுதினார்.

அவரது வாழ்க்கை வரலாற்று பதிப்புரிமையைப் பாதுகாப்பதற்கான ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் மதிப்பு கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம சுமார் ரூ.15 கோடியாக இருந்தது.

மேலும் அது 11 இலட்சம் பவுண்ட் (சுமார் ரூ.7.4 கோடி) இலாபம் ஈட்டியதாக அறிவிக்கப்பட்டது.

மலாலாவின் புத்தகங்கள், சொற்பொழிவுகளைப் பயன்படுத்துபவர்கள் இந்த நிறுவனத்துக்கு பதிப்புரிமைத தொகை செலுத்துவதன் மூலம் அந்த நிறுவனம் வருவாய் ஈட்டி வருகிறது.

மலாலா மற்றும் அவரது குடும்பத்தினர் அந்த நிறுவனத்தின் பங்குதாரர்களாக உள்ளனர். இவ்வாறு தகவல்கள் தெரிவிக்கின்றன.(இ-10)

## பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றார் ரோட்ரிகோ டுட்டெர்டே

(மணிலா)



பிலிப்பைன்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதி ரோட்ரிகோ டுட்டெர்டே நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

தெற்காசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்வதற்கான வாக்குப்பதிவு கடந்த ஜூன் 9 ஆம் திகதி நடைபெற்றது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட ரோட்ரிகோ டுட்டெர்டே பெரும்பான்மை சதவீத வாக்குகளை பெற்று அபார வெற்றி பெற்றார்.

இந்நிலையில்,. பிலிப்பைன்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதியாக ரோட்ரிகோ டுட்டெர்டே நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டுள்ளார். இவர் பிலிப்பைன்ஸ் நாட்டின் 16ஆவது ஜனாதிபதி யாவார். அந்நர்ட்டு உச்ச நீதிமன்றம் துணை நீதிபதி முன்னிலையில், மலகனாங் மாளிகையில் இந்த பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. (இ-10)

## பொலிஸாரைக் குறிவைத்து தற்கொலைப் படைத்தாக்குதல்

### 40 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பொலிஸார் பயணித்த பேருந்தை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் புறநகர்ப் பகுதியில் நேற்று பொலிஸார் பயணித்த வாகனங்களை குறிவைத்து தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். வத்ராக் பகுதியில் இருந்து காபூல் நோக்கி சென்றபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் பேருந்தில் பயணித்த 40 பேர் உயிரிழந்ததாகவும், இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றிருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா, இந்தத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் பற்றிய விவரங்களை சேகரித்து வருவதாக ஆப்கானிஸ்தானின் உள்துறை செய்தித் தொடர்பாளர் சேதிக் சித்திக்கி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (இ-10)

## 1109கரட் வைரம் லண்டனில் ஏலம்

உலகின் மிகப்பெரிய பட்டை தீட்டப்படாத வைரம் லண்டனில் ஏலம் விடப்படவுள்ளது.

தென்னாபிரிக்க நாடான போட்ஸ்வானாவில் வைர சுரங்கங்கள் உள்ளன. இங்கு கனடாவை சேர்ந்த லுகாரா டைமண்ட் கார்ப்பரேஷன் சுரங்கம் அமைத்து வைரங்களை வெட்டி எடுக்கிறது.

கரோ என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மிகப்பெரிய வைரத்தை இந் நிறுவனம் கண்டு பிடித்தது.


டெனிஸ் பந்து அளவுக்கு உள்ள பட்டை தீட்டப்படாத அந்த வைரத்துக்கு, 'டெஸ் ஸிடி லா ரோனா' என்று பெயர் வைத்துள்ளனர்.

இதற்கு போட்ஸ்வானா மக்கள் பேசும் ஸ்வானா மொழியில், 'எங்கள் ஒளி' என்று பொருள். இந்த பட்டை தீட்டப்படாத வைரம் 1109 கரட் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட வைரங்களில் இதுதான் மிகப்பெரியது என்று கூறுகின்றனர்.(இ-10)

## இஸ்ரேலுடன் இணைந்து இந்தியா உருவாக்கிய ஏவுகணை வெற்றி

இஸ்ரேல் நாட்டுடன் இணைந்து இந்தியா உருவாக்கிய புதிய ஏவுகணை ஒடிசாவில் நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.



இஸ்ரேல்-இந்தியா கூட்டு முயற்சியில் நடுத்தர தூர ஏவுகணையான எம்.ஆர்.-எஸ்.ஏ.எம். என்ற ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.

70 கி.மீ. வரை பறந்து சென்று எதிரியின் இலக்கை தாக்கும் வகையில் இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணையில் கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை வசதியும் உள்ளது.

இந்த ஏவுகணை நேற்று முன்தினம் சோதனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது.

அதன்படி நேற்று இந்த ஏவுகணை ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள சோதனை தளத்தில் இருந்து ஏவப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 8.15 மணி யளவில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை திட்டமிட்ட இலக்கை வெற்றிகரமாக தாக்கியதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தஏவுகணை சோதனை வெற்றி பெற்றதையடுத்து. பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் இதுபோன்று தரையில் இருந்து வானத்தில் சென்று தாக்கக்கூடிய நீண்ட தூர மற்றும் நடுத்தர தூர ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன. ஆண்டுக்கு 100 ஏவுகணைகள் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

# அரசு கல்வி அபிவிருத்திக்காக 83 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

## கல்வி இராஜாங்க அமைச்சர் பெருமிதம்

புதிய அரசாங்கம் 83 பில்லியன் ரூபாவை பாடசாலை, கல்விக்காக ஒதுக்கியிருப்பது இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி ராதாகிருஸ்ணன் நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகளை நேரில் பார்வையிட்டார்.

இதன்போது பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வரும் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை விரைவில் புனரமைக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

அத்துடன் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த திறமையான ஆசிரியர்களை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. இதில் முக்கிய பங்கினை கல்வியியல் கலாசாலைகளுக்கு காணப்படுகின்றது.

அந்த வகையில் அனைத்துப்பிரதேசங்களிலும் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை சிறந்த நிலைக்குக் கொண்டு செல்ல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன



என அவர் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் என்ற பேதங்கள் இன்றி ஒற்றுமையாக செயற்பட வேண்டியது முக்கியமானது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையின் கட்டடங்களிலுள்ள குறைபாடுகள், மின்சாரப்பிரச்சினைகள், தங்குமிடப்பிரச்சினைகள் என அனைத்து பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்வதற்காக் முதல் கட்டமாக 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-10)

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்

இலஞ்சம் மற்றும் ஊழல, மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக் குழுவை அவமதித்தமை சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக ஆணைக் குழு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

வழக்கில் பிரதிவாதியாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிடப் பட்டுள்ளார். விசாரணை ஒன்றுக்காக ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு விடுத்த அறிவிப்பை அவர் புறந்தள்ளியமையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழுவின் 20வது ஷரத்திற்கு அமைய பிரதிவாதியான நாடாளுமன்ற உறுப்பினரை நீதிமன்றத்திற்கு அழைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

இதனிடையே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொச) ஊழியர்கள் சிலரை அரசியல் பணிகளுக்கு பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முனனாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட மூன்று சந்தேக நபர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் சந்தேக நபர்களை தலா 50 ஆயிரம் ரொக்கப் பிணையிலும் தலா 50 இலட்சம் சரீரப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. (இ-10)



யாழ பாதுகாபபு படைததலைமையகததின ஏறபாடடில புதிய கணடுபிடிபபு கணகாடசி நேறறு முனதினம காலை 9 மணிககு யாழ.வ்ரசிஙகம மணடபததில ஆரமபிககபபடடது. இக கணகாடசியில இராணுவ வ்ரரகளின புதிய கணடுபிடிபபுககள பல காடசிபபடுததபபடடுளளன. இக கணகாடசியின ஆரமப நிகழவில யாழ.மாவடட கடடளை தளபதி மேஜர ஜெனரல மகேஸ சேனநாயகக, யாழ.மாவடட அரச அதிபர நா. வேதநாயகன மறறும யாழ.மாவடட சிரேஷட பொலிஸ அததியடசகர ஸரனஸலஸ மறறும பிரதேச செயலரகள, பாடசாலை மாணவரகள பலர கலநது கொணடனர. (படஙகள்-பொ.சோபிகா)

# காசோலை வழங்கும் நிகழ்வு அமைச்சர் சஜித் பங்கேற்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்புக் கடனுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ளது. குறித்த தகவல் கிடைக்காத விண்ணப்பதாரிகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு 021 222 2039 என்ற தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-9)

## ரம்புட்டானால் குழந்தை பலி

(கொழும்பு)

ரம்புட்டான் விதையொன்று தொண்டையில் சிக்கியதால் 11 மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கம்புருபிடிய- லிக்கமுல்ல பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குழந்தை தனது தாத்தாவின் வீட்டில் இருந்த ரம்புட்டான் விதையொன்றை விழுங்கியமையினாலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறித்த ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கியதைத் தொடர்ந்து கம்புருவிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ-10)

## ஓவியக் கண்காட்சி

தனுஆட்நிறுவத்தின்பொறு ப்பாசிரியார் மா.சி. சிவதாசனின் ஓவியக்கண்காட்சி இ,15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்ற கலைக்கூடத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும்.

கண்காட்சியை தினமும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பார்வையிடமுடியும். (இ-5)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி

சுயதொழில் முயற்சியாளர்கள் உருவாக்கும் வகையில் யாழ். கரவெட்டி பிரதேச செயலக விதாத வள நிலையத்தில் எதிர்வரும்5 ஆம் திகதி சாதாரண கம்மும் (gum)வைன்டர் கம்மும் (binder gum)உம் தயாரிக்கும் தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சிகள் நடைபெற இருப்பதால் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் கரவெட்டி பிரதேசசெயலகம் விதாதா வள நிலையத்தில் தமது பெயர்களை பதிவு செய்ய முடியும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-18

### (30.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

### பகுதி II

01. 1. நிலவு 2.மின்மினிப்பூச்சியைப் போல் 3.பள்ளம்
4.சலசல 5.மேலும் கீழும் 6.பௌர்ணமி 7.மின்மினிப்பூச்சி
8.தூரம் 9.அழகான 10.மலைப்படிகள்
02. 1.பிரம்மச்சாரி 2.சிறுபட்டி
03. 1.பதற்றம் 2.உளவாளி
04. 1.அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்
2.நுனிப்புல் மேய்தல்
05. 1.அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து இறங்கினர்
2.சிறு துரும்பும் பல் குத்த உதவும்
06. 1.வெளிநோயாளர் பிரிவு 2.கல்விப் பொதுத் தராதரம்
07. 1.குயவன் 2.கொல்லன்
08. 1.வீரன் போட்டியில் பரிசு பெற்றான்
2.கணவன் விரைவாக வீட்டை நோக்கிச் சென்றான்
09. 1.மகனே! விலங்குகள் பகுத்தறிவுடையனவா?
2.அறம் செய விரும்பு! என ஒளவையார் கூறினார்.
10. 1.Pineapple 2.Panda
11. 1.தயவு செய்து அந்தப் படத்தைப் பாருங்கள்
2.நான் வெளியே போகலாமா?
12. 1.புகையிரத நிலையம் 2. எனது வீடு
13. 1.லமய் செல்லங்கரன்வா 2.அப்பி பாசலட யனவா
14. 1.இரவு 2.மழை 3.பகல் 4.மின்னல்
15.1 16.3 17.1 18.4 19.3 20.4
21.2 22.1 23.2 24.1 25.3 26.2 27.3
28.3 29.4 30.2 31.4 32.3 33.3 34.2
35. 1.U முடுக்கு திரும்பத் தடை 2.இடப்பக்கம் திரும்பத் தடை
3. ஒலி எழுப்பத் தடை 4.வாகனம் செல்லத்தடை
36. 3000 , 2980 37.2007 38.350ml
39.ரூபா 210.00 40.ரூபா 105.00 41.15:10
42. முற்பகல் 10.30 43.புதன்கிழமை 44.4/6=2/3
45. 2 வட்டம் 1 செவ்வகம் 46. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளிகள் வழங்குக.

*மாதிரி வினாத்தாள் -18*
*பகுதி-1*
*திருத்திய விடை*
*2)பாதுகாப்பு(3)*
*15)29,34(1,2)*

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## பொருளியல் பகுதி-I

Teacher: N.B.Kageetharan, B.A,H.N.Dip in Acc, P.G.Dip in Ed,
M.A(Econ) Visiting Lecture-Technical College, colombo.

01)பின்வருவனவற்றில் நியமக் கூற்றாகக் கருதப்பட முடியாத கூற்று எது?
1.அபிவிருத்தியடைந்த நாடொன்றின் அந்தஸ்திற்குப் பொருளாதார வளர்ச்சி 8% மேலான ஒன்றாக இருக்க வேண்டும்.
2.நிறைதொழில் நிலைமை என்பது சாத்திய வளையியின் மீதான புள்ளியின் மூலம் காட்டப்படலாம்.
3.வளர்முக நாடுகளில் வறுமைப் பிரச்சினை உண்டு.
4.சிறந்த வளர்ச்சி என்பது சமூக நிதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
5.வேலையின்மை வீதம் 5% இலும் குறைவான ஒன்றாயின் நிறைதொழில் மட்ட நிலை எனப்படும்.

02) உற்பத்தியில் அமையச்செலவை உருவாக்கக்கூடிய நிகழ்வுகளில் ஒன்றாவது?
1.அருமையற்ற வளங்களின் பயன்பாடு
2.மாற்றுபயன்பாடற்ற வளப்பயன்பாட்டின்போது
3.பொதுப்பண்ட உற்பத்திகளின்போது
4.குறைதொழில்மட்ட பொருளாதாரம் உற்பத்தியை அதிகரிக்கும்போது
5.மிகையான வளப்பயன்பாட்டின்போது


03) எவ்வாறு உற்பத்தி செய்தல் என்னும் பிரச்சினைக்குக் காரணமாக அமைவது எனக் கூறமுடியாது?
1.வள அருமைத்தன்மை
2.பல்வேறு காரணிச்சேர்க்கைகளுக்கு வாய்ப்பு இருத்தல்
3.சார்பு உற்பத்திச் செலவுகள் வேறுபடுதல்
4.மனித விருப்பங்களின் எண்ணற்ற தன்மை
5.பல்வேறு தொழில்நுட்ப பிரயோக வாய்ப்பிருத்தல்

04) பொருளாதாரமொன்றில் இருவேறு உற்பத்திகள் தொடர்பில் உள்ள தரவுகள் பின்வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| X பொருள் | 0 | 5 | 15 | 30 | 50 |
| Y பொருள் | 100 | 80 | 60 | 40 | 20 |


X பொருள் உற்பத்தி கிடை அச்சில் கருதப்படின் பின்வருவனவற்றில் ஏற்புடைய கூற்று
1.சாத்தியவளையி நேர்கோட்டு வடிவானது
2.சாத்தியவளையி தொடர்பில் அதிகரிக்கும் அமையச் செலவு வெளிப்படும்
3.இவ் அட்டவணை மாறா அமையச் செலவைக் குறிக்கின்றது
4.சாத்தியவளையி உள்நோக்கி குழிந்த வடிவில் இருக்கும்
5.மேற்கூறியவை எதுவும் பொருத்தமற்றவை ஆகும்.

05) பின்வரும் உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்று வலது புறம் நோக்கி நகர்வடைய ஏதுவாகக்கூடிய காரணி




1.X பொருளிற்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் Y பொருளிற்குப் பயன்படுத்தப்படல்
2.Y பொருளிற்குவினைத்திறனுடன்கூடிய தொழில்நுட்பம்பயன்படுத்தப்படல்
3.பயன்படுத்தப்படாதிருந்த காரணிகள் பெருமளவில் மீள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படல்
4.ஊழியப்படையின் விளைதிறன் அதிகரித்தல்
5.X, Y பொருட்களின் கேள்வி அதிகரித்தல்


6)தரப்பட்ட உற்பத்திச் சாத்திய எல்லையில் காட்டப்பட்டவாறு உற்பத்திப் புள்ளி A-B வரையான நகர்வு குறிப்பது




1.விவசாயத்துறையின் உற்பத்தித்திறன் முன்னரிலும் குறைவடைந்துள்ளது.
2.கைத்தொழில் வெளியீடுகள் தொடர்பில் அமையச் செலவு பூச்சியம்
3.கைத்தொழில் வெளியீடுகள் மாறாத நிலையில் விவசாய வெளியீடுகள் 50 அலகால் குறைவடைந்துள்ளது.
4. விவசாயப் பொருட்கள் தொடர்பில் மொத்தக்கேள்வி குறைவடைந்துள்ளது.
5.பொருளாதாரம் 100 அலகுகள் கைத்தொழில் பொருட்களையும் 100 அலகுகள் விவசாயப்பொருட்களையும் அதிகரிக்கும் அமையச் செலவில் உற்பத்தி செய்யும் இயலுமை கொண்டது.

07) சந்தைப் பொருளாதாரம் தொடர்பாக பொருத்தமற்ற கூற்று
1.எதனை எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை ஒப்பீட்டுக்காரணி விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.
2.சந்தை முறையின் குறிக்கோள் தனிப்பட்ட இலாபம் ஆகும்.
3.போட்டி நிலைமையின் கீழ் உற்பத்திச் செலவுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.
4.சந்தையின் தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது அரசின் கொள்ளைகள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.
5.தனிப்பட்ட செலவுகள், வெளிவாரிச் செலவுகள் தொடர்பாக நிறுவனங்கள் பெருமளவு கருத்தில் கொள்வதில்லை.

08) இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடம் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகிறது. இப்பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டமானது புள்ளி A யிலிருந்து புள்ளி B நோக்கி மாற்றடைவதன் அமையச் செலவானது




1.20 அலகு ஆடை
2.பூச்சியம் ஆகும்
3.10 அலகு உணவு
4.ஓரலகு உணவுக்கு 1/2 அலகு ஆடை
5.30 அலகு ஆடைகளுக்கு 20 அலகு உணவு

09) வெளியீடானது 100 இலிருந்து 120 அலகுகளாக அதிகரித்தபோது மொத்தச் செலவானது ரூபா 5000 இலிருந்து 5400 ஆக அதிகரித்தது. நிலையான செலவு ரூபா 4000 ஆகும். பின்வருவனவற்றில் தவறானது எது?
1. எல்லைச் செலவு ரூபா 20
2.சராசரிச் செலவு வீழ்ச்சியடையும்
3.மாறும் செலவு ரூபா 400 ஆல் உயரும்
4. சராசரி நிலையான செலவு வீழ்ச்சியடையும்
5.சராசி மாறும் செலவு வீழ்ச்சியடையும்

10) உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் குறிப்பிட்ட விவசாயப் பண்டங்களுக்கு இழிவு விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றது. இவ்விலைக் கொள்கையை அதே மட்டத்தில் தொடர்ந்து நாடு முழுவதும் பேண அரசு விரும்பும் இந்நிலைமை காரணமாக ஏற்படுவது.
1.விவசாயிகள் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதை நிறுத்தி வேறு பொருட்களில் நாட்டம் கொள்வர்
2. சந்தையில் உற்பத்திப் பற்றாக்குறை தோன்றுமாயின் அது ஆரம்பத்தில் கறுப்புச் சந்தை விலையைத் தோற்றுவிக்கும்
3.இழிவு விலையுடன் ஒப்பிடும் போது சமநிலை விலையானது ஆரம்பத்திலிருந்தே உற்பத்தியாளருக்கு அதிக நன்மையை ஏற்படுத்தும்
4.இந்நடவடிக்கைநாட்டின்ஏனையவிவசாயப்பொருட்களின்விலைகளையும்அதிகரிக்கச்செய்யும்.
5. சந்தையில் உற்பத்தி மிகை தோன்றுமாயின் அதை அரசு கொள்வனவு செய்யும்.

11) நீண்ட காலத்தில் அளவுத்திட்ட சிக்கனமின்மை (diseconomies of scale) காரணமாக
1.நீண்ட கால மொத்தச் செலவுக் கோடு கீழ் நோக்கிய சரிவைக் கொண்டிருக்கும்.
2.நீண்ட கால சராசரி செலவுக் கோடு மேல் நோக்கி சரிந்து செல்லும்.
3.நீண்ட கால சராசரி செலவுக் கோடு கீழ்நோக்கி சரிந்து செல்லும்.
4.நீண்ட கால எல்லைச் செலவுக் கோடு கீழ் நோக்கி நகரும்.
5.நீண்ட கால மொத்தச் செலவுக் கோடு கீழ்நோக்கி நகரும்.

12) எல்லைச்செலவைவிட எல்லை வருமானம் உயர்வாகக்காணப்படும் போது நிறை போட்டிநிறுவனமானது.
1.உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
2.உற்பத்தியை மாற்றாமல் அதே மட்டத்தில் பேண வேண்டும்
3.உற்பத்தியை குறைக்க வேண்டும்.
4.தனியுரிமைப் போட்டியாக மாற வேண்டும்.
5.சந்தையை விட்டு விலக வேண்டும்.


13) குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டில் மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையும் போது
1.ஊழியத்தின் சராசரி உற்பத்தி பூச்சியமாக இருக்கும்.
2.ஊழியத்தின் எல்லை உற்பத்தி பூச்சியமாக இருக்கும்.
3.உழியத்தின் எல்லை உற்பத்தி எதிர்க்கணியமாக இருக்கும்.
4.ஊழியத்தின் சராசரி உற்பத்தி எதிர்க்கணியமாக இருக்கும்.
5.ஊழியத்தின் எல்லை உற்பத்தி அதிகரிக்கும்.

14) சந்தை முறைமையானது பொதுப் பொருட்களை வழங்கத் தவறுவதற்கு காரணமாக அமைவது.
1. தனியார் நிறுவனங்களை விட அரச நிறுவனங்கள் பொதுப் பொருட்களை மலிவாக உற்பத்தி செய்கின்றன.
2.நுகர்வோர்கள் பொதுப் பொருட்களை விட தனியார் பொருட்களை வாங்குவதை அதிகம் விரும்புகின்றனர்.
3. நுகர்வோர்கள் விலை எதுவும் செலுத்தாமல் பொதுப் பொருட்களின் நலன்களைப் பெற முடியும்.
4. குறைந்த வருமான வகுப்பினர் பொதுப் பொருட்களை நுகரப் போதிய பணம் இல்லாமையால் அதிகம் பாதிக்கப்படுதல்.
5. பொதுப் பொருட்கள் மக்களுக்கு அவசியமற்றவையாக இருக்கும்.

15) ''X'' பண்டத்தின் கேள்விச் சமன்பாடு கீழே தரப்படுகின்றது.
$QD_X=2000-100P_X$ ரூபா 15 விலையில் இப் பண்டம் எவ்வளவு வேண்டுமானாலும் இறக்குமதி செய்யப்படலாம். எனினும் 250 அலகுகள் இறக்குமதி நிரம்பலாலும் எஞ்சிய தொகை உள்நாட்டு நிரம்பலாலும் மொத்தக் கேள்விக்குச் சமனடைகின்றது. பின்வருவனவற்றுள் சரியானது எது?

| | மொத்தக் கேள்வி (அலகு) | கறுப்புச் சந்தை விலை (ரூபா) | உள்நாட்டு நிரம்பல் (அலகு) |
|---|---|---|---|
| 1) | 100 | 12.5 | 250 |
| 2) | 250 | 15.0 | 500 |
| 3) | 500 | 17.5 | 250 |
| 4) | 750 | 20.0 | 500 |
| 5) | 400 | 22.5 | 25 |

16)இங்கு தரப்பட்டுள்ள வரைபடமானது கோதுமை மாவிற்கான சமநிலையினைக் காட்டுகிறது. பொருளின் சமநிலை விலையில் நிரம்பல் நெகிழ்ச்சி யாது?
1) 0.46
2) 0.32
3) 0.14
4) 0.62
5) 0.18




17) ஒரு நிறுவனத்தின் நிலையான காரணிக்கான பண இழப்பீடு 5 மடங்காகுமாயின் மேலதிக செலவுகள்.
1. மூன்று மடங்காகும்
2. ஐந்து மடங்காகும்
3. ஐம்பது மடங்காகும்
4. மாறாது காணப்படும்
5.மேற்கூறிய விடைகள் எதுவும் பொருத்தமற்றது

18) பின்வரும் தகவல்களை ஒரு உற்பத்தி நிறுவனம் கொண்டுள்ளது (மில்லியனில்)
மொத்த மாறும் செலவு (TVC)=72
சராசரி நிலையான செலவு (AFC)=2
சராசரி மொத்தச் செலவு (ATC)=10 எனின்
நிறுவனத்தின் மொத்த வெளியீடு எவ்வளவு?
1) 6அலகுகள் 2) 7.2 அலகுகள் 3) 9 அலகுகள்
4) 10 அலகுகள் 5)8.4 அலகுகள்

19) பொருளாதாரமொன்றின் மெய்வருமான அதிகரிப்பு ஏற்படுவது
1. பெயரளவுத் தேசிய வருமானம் அதிகரிக்கும் போதாகும்.
2. பணவீக்க வேகம் கூடுதலாக இருக்கும் போதாகும்.
3. பணவீக்க வேகத்தை விட குறைந்த வேகத்தில் பெயரளவுத் தேசிய வருமானம் அதிகரிக்கும் போதாகும்.
4. பெயரளவுத் தேசிய வருமானமானது பணவீக்க வேகத்தை விடக் கூடுதலான வேகத்தில் அதிகரிக்கும் போதாகும்.
5. பெயரளவுத் தேசிய வருமானமும் பணவீக்கமும் ஒரே வேகத்தில் அதிகரிக்கும் போதாகும்.

20)பொருளாதாரமொன்றில் அரச வரியானது 200 மில்லியன் ரூபாவினால் குறைய அரச செலவானது 200 மில்லியன் ரூபாவினால் அதிகரித்தது. எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.75 ஆகக் காணப்பட்டது எனின், பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட மாற்றம்.
1) 600 மில்லியனால் அதிகரிக்கும்
2) 200 மில்லியனால் அதிகரிக்கும்
3) 1400 மில்லியனால் அதிகரிக்கும்
4) 800 மில்லியனால் குறையும்
5) 200 மில்லியனால் குறையும்

21) கற்பிதமான பொருளாதாரத்தில் செலவிடக் கூடிய வருமானம் 600 மில்லியன் ரூபா, சராசரி சேமிப்பு நாட்டம் 1/6, செலவிடக் கூடிய வருமானம் 1000 ஆகும் போது சராசரி சேமிப்பு நாட்டம் 1/5 ஆகும். செலவிடக்கூடிய வருமானம் 1500 ஆகும்போது சேமிப்பினதும் நுகர்வினதும் பெறுமதி.
1. சேமிப்பு 300, நுகர்வு 1200
2. சேமிப்பு 525, நுகர்வு 1125
3. சேமிப்பு 375, நுகர்வு 1175
4. சேமிப்பு 900, நுகர்வு 600
5. சேமிப்பு 325, நுகர்வு 1175

22) ஏதாவதொரு பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வுச் செலவு பூச்சியம் ஆயின் அப்பொருளாதாரத்தில்
1. MPC=MPS
2. MPC=APC
3. MPC>APC
4. APC=APS
5. APC>MPC

23)அரச வரி வருமான மாற்று வீதத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்று வீதத்தின் விகிதமாக குறிப்பிடுக?
1.வரி வீதம் எனப்படும் 2.வரித்தாக்கம் எனப்படும்
3.வரித்தளம் எனப்படும் 4.வரி இசைவு எனப்படும்
5.வரி வருமான உணர்வுக் குணகம் எனப்படும்

24) ஒரு நாட்டின் நாணயமாற்று வீதம் வீழ்ச்சியடையுமானால் அதன் விளைவாக அந்நாட்டின் ஏற்றுமதி விலைகள்.
1. உள்நாட்டு நாணய வடிவில் வீழ்ச்சியடையும்.
2. உள்நாட்டு நாணய வடிவில் அதிகரிக்கும்.
3. வெளிநாட்டு நாணய வடிவில் அதிகரிக்கும்.
4. வெளிநாட்டு நாணய வடிவில் வீழ்ச்சியடையும்.
5. எந்தநாட்டு நாணய வடிவிலும் மாற்றமடையாது.

மிகுதி நாளை வெளிவரும்

## கணக்கீடு பகுதி-II விடைகள்

3) அ.

1. க/ப கட்டுப்பாட்டு க/கு (திருத்திய)

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 420000 | அ.மு.கடன் | 40000 |
| வி/னை | 70000 | | |
| மறு ch | 60000 | | |
| இ.கழிவு | 6000 | | |
| உட்திரும்பல் | 9000 | மீ/செ | 525000 |
| | 565000 | | 565000 |
| மீ/வ | 525000 | | |

2. க/ப 525000
(-)ஐ.க.ஏ (88500)
க/ப மு.கொ.செ.தொகை 436500

| | |
|---|---|
| 4.வி/னை | 70000 |
| கொடுத்த கழிவு | 6000 |
| உட்திரும்பல் | 9000 |
| அ.மு.ஐ.க.ஏ. | |
| (93500-42000) | (51500) |
| தேறிய இலாப அதிகரிப்பு | 33500 |

3. அ.மு.ஐ.க.ஏ.க/கு

| | | | |
|---|---|---|---|
| அ.மு.கடன் | 40000 | மீ/வ | 35000 |
| மீ/செ | 88500 | இ/த/க/கு | 93500 |
| | 128500 | | 128500 |
| | | மீ/வ | 88500 |

ஆ.

1. காசேடு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 12500 | கொடுப்பனவுகள் | 11000 |
| வைப்புக்கள் | 12500 | மீ/செ | 14000 |
| | 25000 | | 25000 |
| மீ/வ | 14000 | | |

2. திருத்திய கையேடு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 14000 | வங்கிகட்டணம் | 250 |
| நேரடிவைப்பு | 4500 | மறு ch | 500 |
| | | மீ/செ | 17750 |
| | 18500 | | 18500 |
| மீ/வ | 17750 | | |

3. வங்கி இணக்கக்கூற்று

| | |
|---|---|
| தி.கா.ப.வ.மீதி | 17750 |
| (+)மாற்றப்படாத ch | 3000 |
| | 20750 |
| (-)வசூலிக்கப்படாத ch | (1500) |
| வ.கூ.ப.வ.மீதி | 19250 |

04) அ.

1.கட்டளையிடும் தடவைகள்= D / EOQ

20 கட்டளை = D / 14000

D = 280000Q

2.EOQ = 14000Q

3.மொத்த இருப்பு வைத்தல் கிரயம் = மொத்த கட்டளை கிரயம்

மொத்த இருப்பு வைத்தல் கிரயம்= EOQ xhc / 2 = 140000x0.4 / 2 =2800h

வருடாந்த கட்டளையிடல் செலவு = 2800h

வருடாந்த கட்டளை கிரயம்= கட்டளை எண்ணிக்கை X OC

2800=20XOC

OC =2800/20

ஒரு கட்டளைக்கான செலவு =140h

| திகதி | பெறுவனவு | | | விநியோகம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி |
| 01.03 | | | | | | | 6000 | 12 | 72000 |
| 06.03 | 14000 | 20 | 280000 | | | | 20000 | 17.60 | 352000 |
| 12.03 | | | | 19 000 | 17.60 | 334400 | 1000 | 17.60 | 17600 |
| 24.03 | 14000 | 16.43 | 230000 | | | | 15000 | 16.51 | 247600 |
| 30.03 | | | | 14000 | 16.51 | 231140 | 1000 | 16.46 | 16460 |
| | | | | | | 565540 | | | |

4. 31.03.2016 இல் மூலப்பொருள் இருப்பு= 16460h

5.ப.மூ.பொ.கிரயம் = 565540h

ஆ. களஞ்சியப்பேரேடு

| திகதி | பெறுவனவு | | | வழங்கீடு | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | மொத்தம் | அலகு | விலை | மொத்தம் | அலகு | விலை | மொத்தம் |
| 01.07 | | | | | | | 250 | 6 | 1500 |
| 05.07 | 250 | 7 | 1750 | | | | 500 | 6.50 | 3250 |
| 10.07 | | | | 350 | 6.50 | 2275 | 150 | 6.50 | 975 |
| 15.07 | 150 | 8 | 1200 | | | | 300 | 7.25 | 2175 |
| 21.07 | | | | 100 | 7.25 | 725 | 200 | 7.25 | 1450 |
| 25.07 | 300 | 9 | 2100 | | | | 500 | 8.30 | 4150 |
| 30.07 | | | | 450 | 8.30 | 3735 | 50 | 8.30 | 415 |

1)இ.இருப்பு=415h

2)இ.இருப்பு =50X9 =450h =வி/னைகிரயம்=250X6 =1500
=250X7=1750
=150X8=1200
=250X9=2250
6700

மொத்த இலாபம்= வி/னை 900X15=13500
(-)வி/னை கிரயம் (6700)
6800

05) மொத்த சம்பள விபரம்-சம்பளபட்டியல்

| ஊழியர் | கொடுப்பனவு | | | | மொத்தச் சம்பளம் |
|---|---|---|---|---|---|
| | அடிப்படை சம்பளம் | பிரயாண படி | முடிவுறுத்தல் கூலி | ஊக்குவிப்பு கொடுப்பனவு | |
| சந்தோஷ் | 12 250 | 1000 | --- | --- | 13 250 |
| சரிதா | 11 000 | 1000 | 900 | 200 | 13 100 |
| நமிதா | 11 000 | 1000 | 1000 | 400 | 13 400 |
| | 34250 | 3000 | 1900 | 600 | 39 750 |

2. மொத்த நேர் ஊழியக்கிரயம்

| | பெரியது | சிறியது | |
|---|---|---|---|
| முடிவுறுத்தல் கூலி(110X10) | 1100 | 800 | (80X10) |
| வெட்டுதல்(110X75) | 8250 | 4000 | (80X50) |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு(20X20) | 400 | 200 | (20X10) |
| | 9750 | 5000 | |

3. மொத்த நேரில் ஊழியக்கிரயம்

| | | |
|---|---|---|
| அடிப்படைச்சம்பளம் | (11000X2) | 22000 |
| பிரயாணப்படி | (1000X3) | 3000 |
| | | 25000 |

4. மொத்த மேந்தலை

| | பெரியது | சிறியது |
|---|---|---|
| நேரில் ஊழியம்(3:2) | 15000 | 10000 |
| வாடகை(110:80) | 11000 | 8000 |
| நீர்(1:1) | 1000 | 1000 |
| மின்சாரம்(3:1) | 3000 | 1000 |
| தொலைபேசி(3:2) | 3000 | 2000 |
| | 33000 | 22000 |

5.மொத்த உற்பத்தி கிரயம்

| | பெரியது | சிறியது |
|---|---|---|
| நேர்க்கிரயம் | | |
| நேர் மூலப்பொருள் (110X200) | 22 000 | 8000 (80X100) |
| நேர் உழைப்பு | 9750 | 5000 |
| இறை (110X40) | 4400 | 3200 (80X40) |
| முதன்மை கிரயம் | 36150 | 16200 |
| (+) உ/தி மேந்தலை | 33000 | 22000 |
| மொத்த உ/தி கிரயம் | 69150 | 38200 |

6.பெரியது, சிறியது கைப்பை ஒன்றிற்கான மொத்த உ/தி கிரயம் யாது?

பெரியது=69150 / 110 = 629 h சிறியது= 38200 / 80 = 477.50 h

ஆ. 1.

| | |
|---|---|
| கொள்விலை | (1600 000) |
| பொருத்தல் செலவு | (180 000) |
| ஆரம்ப தொழிற்படு மூலதனம் | 100 000 |
| ஆரம்ப தேறிய காசுப்பாய்ச்சல் | (18 80 000) |

2.

| ஆண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| வி/னை வருமானம் | 500000 | 600000 | 640000 | 770000 | 840000 |
| செ.செலவு | (160000) | (220000) | (240000) | (280000) | (320000) |
| பராமரிப்புச் செலவு | -- | (100000) | -- | (100000) | -- |
| எச்சபெறுமதி | -- | -- | -- | -- | 240000 |
| தொழிற்படுமூலதனம் | -- | -- | -- | -- | 100000 |
| தேறிய காசுப்பாய்ச்சல் | 340000 | 280000 | 400000 | 390000 | 860000 |

3.PBP=4+470 000 / 860 000 x 12= 4வருடங்கள் 7 மாதங்கள்

4.ARR=சராசரி இலாபம் / ஆரம்பமுதலீடு x 100= {(2270000-1540000)/ 5X 100} / 1880000

= 146 000 / 1880000 x 100 = 7.76%

| 5. ஆண்டு | க.கா | தே.கா.பா | தி.கா.பா |
|---|---|---|---|
| 0 | 1 | (1880000) | (1880000) |
| 1 | 0.9 | 340000 | 306000 |
| 2 | 0.82 | 280000 | 229600 |
| 3 | 0.75 | 400000 | 300000 |
| 4 | 0.68 | 390000 | 265200 |
| 5 | 0.62 | 860000 | 533200 |
| | | NPV | 246000 |

இச் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் NPV எதிர்க்கணியத்தில் காணப்படுகிறது.

06)

| இலக்கம் | மதிப்பிடக்கூடிய அம்சம் | விளைவு |
|---|---|---|
| 1 | திரவத்தன்மை | குறைவடையும் |
| 2 | திரவத்தன்மை | அதிகரிப்பு |
| 3 | வினைத்திறன் | குறைவு |
| 4 | இலாபத்தன்மை | முன்னேற்றமடைந்துள்ளது |
| 5 | வினைத்திறன் | அதிகரிப்பு |
| 6 | இலாபத்தன்மை | முன்னேற்றமடைந்துள்ளது |

சொத்துக்களின் வினைத்திறனை மதிப்பிடுவது சொத்து சுழற்சி விகிதம் நிறுவனத்தின் செயற்பாட்டு வினைத்திறனை மதிப்பிடுவது இருப்பு சுழற்சி விகிதம்

ஆ. மேந்தலை பகிர்வு கூற்று

| விபரம் | பகிர்வு அடிப்படை | மொத்தம் | உ/தி திணைக்களம் | | களஞ்சியம் |
|---|---|---|---|---|---|
| | | | தயாரிப்பு | முடிவுறுத்தல் | |
| 1ம் பகிர்வின் பின் | --- | 210 000 | 104 000 | 76 000 | 30 000 |
| களஞ்சியம் | (8:7) | --- | 16 000 | 14 000 | (30 000) |
| | | 210 000 | 120 000 | 90 000 | ---- |

1. தயாரிப்பு= பா.மே / ஊ.ம = 120 000 / 2500 = 48 h

15X6000 / 60 = 1500

10X6000 / 60 = 1000

10X6000 / 60 = 1000 / 2500

முடிவுறுத்தல்= பா.மே / ஊ.ம = 90 000 / 1500 = 60 h

5X6000 / 60 = 500 / 1500

| | M1 | M2 | |
|---|---|---|---|
| 2.நேர்பொருள் | 60 | 22 | |
| நேர்கூலி | 18 | 05 | |
| முதன்மை கிரயம் | 78 | 27 | |
| உ/தி மேந்தலை | | | |
| தயாரிப்பு (48/60X15) | 12 | 8 | (48/60X10) |
| முடிவுறுத்தல்(60/60X10) | 10 | 5(60/60X5) | |
| உ/தி கிரயம் 100% | 100 | 40 | |
| இலாபம் 20% | 20 | 8 | |
| வி/னை விலை 120% | 120 | 48 | |

இ. 1.அடிப்படை சம்பளம்= 8X5X100 =4000h 2. 07=11X200=2200h

3.மொத்த கூலி கொடுப்பனவு= 4000+2200 =6200h

07)

அ. 1. A40=80000 x 10/100 x 4 1/4 =34000

A30=100000 x 10/100 x 2 3/4 =27500

A20=120000 x 10/100 x 1 1/2 =18000

2015.04.01 ஏற்பாட்டு க/கு மீதி = 79 500

2.A30 = 100000-(27500+50000)
மு.கொ.செ.தொகை= 67500h
A60= 90000-4500
மு.கொ.செ.தொ= 85000h

3.புதிய வாகன கொ/வு=
62500+88500+50000
பெறுமதி=201 000 h

4. a.மோட்டார் வாகன கிரயம்= 80000+120000+150000+201000=551000h

b.மோட்டார் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு மீதி
=79500+ (8000+5000+12000+4500+15000+10050)
=79500+54550-37000=97050h

c. a.தேறிய இலாபம்
=-54550+(-5000)+3000
=56550h குறையும்

b.கசு
=-240000+(-50000)
=290000hகுறையும்

ஆ. 1. சமந்தா வணிகத்தின்
3103.2016 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

| | | |
|---|---|---|
| வி/னை | 390000 | |
| (-) உட்திரும்பல் | (8000) | 382000 |
| கொ/வு | 324000 | |
| (-) வெளித்திரும்பல் | (4000) | |
| | 320000 | |
| (-இறுதி இருப்பு) | (26154) | |
| (-) வி/னை கிரயம் | | (293846) |
| மொ.இலாபம் | | 88154 |
| (+) பெற்ற கழிவு | | 4000 |
| | | 92154 |
| (-) செலவுகள் | | |
| கொடுத்த கழிவு | 8000 | |
| செயற்பாட்டுச் செலவு | 16000 | |
| தளபாடத்தேய்வு | 4000 | |
| வங்கிக்கடன் வட்டி | 4000 | (32000) |
| தேறியஇலாபம் | | 60154 |

## இலங்கை பொறுப்புக்கூறல் செயன்முறையில்

# அனைத்துலக பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும்

### ஐரோ.ஒன்றியம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**போருடன் தொடர்புடைய பொறுப்புக்கூறல் செயல்முறைகளில், அனைத்துலக பங்களிப்பை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.**



ஐ.நா. மனித உரிமைகள பேரவையில் நேற்று முன்தினம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் உரையாற்றிய, நெதர்லாந்து தூதுவர், ரொடெறிக் வான் ஸ்கிரேவன்,

“நீண்ட செயல்முறையின் ஆரம்பக் கட்டத்திலேயே இலங்கை இன்னமும் இருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளில் இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டியவை அதிகம் உள்ளன.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பனவற்றை உள்ளடக்கிய இந்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

நம்பகமானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, பொறுப்புக்கூறல் பொறிமுறையில் அனைத்துலக பங்களிப்பு மிகவும் அவசியமானது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கம் நீக்க வேண்டும்.

சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் இயல்பு வாழ்வை ஏற்படுத்த வேண்டும். தடுப்புக்காவலில் உள்ளவர்களை விடுவிக்க வேண்டும். அல்லது சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

பாதுகாப்புப் படையினரின் பாலியல் மற்றும் பாலினத்தைஅடிப்படையாககொண்ட வன்முறைச் சம்பவங்களை தடுக்க வேண்டும். அவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும், எஞ்சியுள்ள காணிகளையும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இலங்கை தொடர்பாக கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, ஐரோப்பிய ஒன்றியம் ஒத்துழைக்கத் தயாராக உள்ளது” என்றும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கைக் கடற்படை அதிகாரியின் பதவியிறக்கம் ஜனாதிபதியால் இரத்து

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைத் தளபதியினால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டு, பதவியிறக்கம் செய்யப்பட்ட, கடற்படைப் புலனாயவு அதிகாரியான லெப்.கொமாண்டர் கே.சி.வெலகெதரவுக்கான தண்டனையை ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன இரத்துச் செய்துள்ளார்.

இலங்கை கடற்படைத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தாமல் வெளிநாடு சென்றார் என்ற குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட லெப்.கொமாண்டர் கு.சி.வெலகெதரவுக்கு எதிராக விசாரணை நடத்த இராணுவ நீதமன்றம் அமைக்கப்பட்டது.

அதில் குற்றவாளியாக காணப்பட்ட நிலையில், லெப். கொமாண்டர் வெலகெதர நான்கு ஆண்டுகள் பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

இந்தநிலையில், அவர், ஆயுதப்படைகளின் பிரதம தளபதியான, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்தார். இதையடுத்தே, அவரது பதவியிறக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை கடற்படை பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி இந்த தகவலை வெளியிட்டார்.

இதேகுற்றச்சாட்டு லெப். யோஷித ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள போதிலும், அவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை குறித்து கடற்படைப் பேச்சாளரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர்,லெப். கொமாண்டர் வெலகெதர, மிக மூத்த அதிகாரி. லெப். யோஷித ராஜபக்ஷ, இளநிலை அதிகாரி. எனவே இவர்கள் இருவருக்குமான தண்டனைகள் சமமானதல்ல.

எனினும், கடற்படையில் பணியாற்றிய போது, யோஷித ராஜபக்ஷ 74 தடவைகள் வெளிநாடு சென்றுள்ளார். இதில், 24 சந்தர்ப்பங்களில், முறையான அனுமதி பெறப்படவில்லை.

யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக தற்போது முன்னெடுக்கப்படும், நிதிக்குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்த பின்னர், இலங்கை கடற்படையின் விசாரணைகள் ஆரம்பமாகும்’ என்று தெரிவித்தார்.(இ-10)

# 8000 பட்டதாரிகளுக்கு அரச பதவிகள்

8 ஆயிரம் பட்டதாரிகளை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகளாக இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த வாரம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்திற்கு அமைய இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், இதற்கமைய குறித்த பட்டதாரிகளில் 8ஆயிரம் பேரை அரச நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அரச சேவைக்கு முதற் தடவையாக இவ்வாறான பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும், அடுத்த மாதம் அளவில் பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

## இன்று ஒரு தகவல்

### முன்கூட்டியே சொல்லுதல்

மனித மனம் எப்போதுமே இழுத்த இழுப்புக்குச் சட்டென்று வருவதில்லை. சாவகாசமாகத்தான் வரும்.திடீர் திடீர் என்று சில விடயங்களைச் சொன்னால் மற்றவர்களின் ஒத்துழைப்பை பெறுவதென்பது மிகக் கடினம். எதையும் முன்கூட்டியே சொல்ல வேண்டும்.

திடீரென்று சினிமாவுக்குக் கிளம்பு என்றால், மனைவி அட நீங்க வேற! பிள்ளை இன்னும் சாப்பிடவில்லை; பாத்திரம் தேய்க்கணும்; பக்கத்து வீட்டுப் பங்கஜத்தை வேற வரச் சொல்லிட்டேன்–வேலையெல்லாம் அப்படி அப்படியே கிடக்கு. சினிமாவாம் சினிமா! என்று நீளமாக ஆரம்பிக்கக்கூடும்.காலையில் புறப்படும் போதே சொல்லிவிட்டுச் சென்றிருந்தால் பிரச்சினையே இல்லை.

கடன் கேட்கும் போது கூட, அடுத்த மாதம் எனக்கு ஒரு பெரிய செலவு வர இருக்கிறது. எப்படியும் சமாளித்துவிடுவேன். சமாளிக்க முடியாவிட்டால் உங்களிடம் தான் வருவேன் என்று முன்கூட்டியே அறிவிப்பு மணியை அடித்து வைத்தால் கடன் தொகை கைக்கு வருவது பெரும்பாலும் உறுதி. அதை விட்டுவிட்டு, இப்பொழுதே வேண்டும் என்று கேட்டால், நின்னது நிக்க இப்படிக் கேட்டா நான் எங்கப்பா போவேன்? போயிட்டு வா! என்கிற பதில் தான் கிடைக்கும்.

எதிர்பாராமல் வருகிற பிரச்சினைகளுக்கு யாராயிருந்தாலும் திணற வேண்டியதுதான். ஆனால், முன் கூட்டித் தெரிந்தே வரும் பிரச்சினைகளுக்குத் திணறுவது எவ்வளவு பேதமை?

அதேபோல, நல்ல காரியங்களையும் விசேட நிகழ்ச்சிகளையும் மிக வேண்டியவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்துவிடுவது நல்லது. இல்லாவிட்டால், கடைசி நிமிடத்தில் தான் சொன்னான். நல்லது கெட்டதைக் கூடப் பகிர்ந்துக்க மாட்டேங்கிறான். எல்லாத்தையுமே அவன் இஷ்டத்துக்கு செஞ்சுக்கிறான் என்றெல்லாம் புலம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். முன்கூட்டியே சொல்லாவிட்டால் தங்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை என்று கற்பனை செய்து கொள்கிறது இவ்வுலகம், அதில் உண்மை ஓரளவு இல்லாமல் இல்லை.

ஒரு நண்பர் உறவினர்–வீட்டிற்குத் திடுதிப்பென்று போய் இறங்குபவர்கள் எத்தனை யெத்தனை பேர்! முன்கூட்டியே அறிவித்தாலோ நம்மை வரவேற்கும்–உபசரிக்கும் மன நிலையோடும் மகிழ்ச்சியோடும் இருக்க அவர்களுக்கு நாம் வாய்ப்புத் தந்தவர்களாக ஆவோம். சொல்லாமல் கொள்ளாமல் திடீர் எனப் போய் இறங்கினாலோ அது அவர்களது வேலைகளைக் கெடுத்ததாக ஆவதோடு, வரவேற்பும் உபசரிப்பும் அவ்வளவு பலமாய் இராது.

வீட்டைக் காலி செய் என்று திடுதிப்பென்று சொல்வதும் வினையில் முடிகிறது.ஒன்று, சண்டை உண்டாகிறது; அல்லது; காரியம் ஆவதில்லை.

மேற்கொண்டு அது மனிதாபிமானம் உள்ள செயலும் இல்லையே!

ஆதிக்கம் செலுத்தும் குணம்; பிறர் துன்பங்களை உணராத மனம்; பிறரை மதிக்காத சுபாவம்; மிகச் சுமாரான நிர்வாகத்திறன்; திட்டமிட்டு செயலாற்றும் தன்மை இல்லாமை ஆகிய பல துறைகளின் ஒட்டுமொத்தமான வடிவமே எதையும் திடுதிப்பென்று தெரிவித்து அது உடனே ஆக வேண்டும் என எதிர்பார்ப்பது.

இந்த ஒரு குணத்தை விலக்கினாலே நாம் பல நல்ல குணங்களை தன்மைகளைக் கைக்கொண்டவர்களாக ஆவோம்!

**லேனா தமிழ்வாணன்**

# நீதிமன்றில் கொட்டாவி விட்ட இளைஞன் விளக்க மறியலில்

கொட்டாவி விட்டு நீதிமன்றை அவமரியாதை செய்தமைக்காக இளைஞர் ஒருவருக்கு நீதிமன்றம விளக்கமறியல் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நீதிமன்றின் பணிகளை பூர்த்தி செய்து நீதவான், ஆசனத்தை விட்டு இறங்கி வரும்போது சத்தமாக கொட்டாவி விட்டதாக இளைஞர மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் சானீமா விஜேபண்டார குறித்த இளைஞரை எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர், நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைகின்றன அமைதியாக இருக்கவும் என அறிவித்தபோது குறித்த இளைஞர் சத்தமாக கொட்டாவி விட்டுள்ளார்.

களனி பெத்தியாகொட பிரதேசத்தைச் சேர்ந்த சுரங்க ஜனக குமார என்ற இளைஞரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கஞ்சா போதைப் பொருள் வழக்கு ஒன்றில் முன்னிலையாகியிருந்தார். சந்தேக நபருக்கு முன்னதாக 5000 ரூபா அபராதத்தை நீதிமன்றம் விதித்திருந்தது.

அபராதப் பணத்தைச் செலுத்தும் வரையில் குறித்த இளைஞர் நீதிமன்ற சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியாகி நீதவான் செல்ல முயற்சித்தபோது உரக்க கொட்டாவி விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குறித்த இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால், எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-30.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.77 | 148.32 |
| பிரிட்டன் | பவுண்ட் | 193.20 | 200.04 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.67 | 166.05 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.74 | 152.68 |
| கனடா | டொலர் | 111.05 | 115.50 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.75 | 111.58 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.84 | 110.80 |
| இந்தியா | ரூபா | 2.1518 | ------- |
| சீனா | யுவான் | 21.8674 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.7533 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8891 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7287 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5459 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 80 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 900 | 600 | 600 | 600 | 800 | 600 |
| தக்காளி | 250 | 300 | 230 | 200 | 240 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 160 | 200 | 100 | 140 | 160 | 160 | 150 |
| கரட் | 260 | 400 | 100 | 140-300 | 240 | 280 | 300 |
| பூசணி | 80 | 150 | 90 | 80 | 80 | 100 | 70 |
| புடோல் | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 140 | 120 | 160 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 180 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 100 | 90 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 100 | 120 | 110 | 160 | 100 |
| பயற்றங்காய் | 80 | 200 | 40 | 80 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 120 | 160 | 200 | 150 |
| பீற்றூட் | 160 | 200 | 100 | 100 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 300 | 400 | 250 | 200 | 200 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 300 | 500 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 180 | 300 | 170 | 200 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | — |
| கீரை - 1பிடி | 20 | 20 | 10 | 20 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 220 | 400 | 160 | 200 | 200 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 300 | 160 | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 200 | 200 | — | 400 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 80 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 40 | 60 | 60 | 50 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் இடையே மோதல் 217

இதை தொடர்ந்து அவர்களுக்கும் கருணா ஆதரவு விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொண்டனர். சிறிய ரக பீரங்கிகளினாலும் சுட்டனர். இருதரப்பிலும் தலா 1000 விடுதலை புலிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.

கருணா கோஷ்டியின் முக்கிய நிலைகளை குறி வைத்துத் தாக்கியபடி பிரபாகரன் ஆதரவு விடுதலை புலிகள் முன்னேறினார்கள். வாகரை என்ற இடத்தில் இருந்து வடக்கே 12 கிலோ மீற்றர் தொலைவில் கதிரவேலி என்ற இடத்தில் உள்ள கருணா கோஷ்டியின் முகாமைப் பிரபாகரன் படையினர் கைப்பற்றினார்கள். இது பெரிய கடற்கரை முகாம் ஆகும்.

இது தவிர மேலும் சில பகுதிகளும் விடுதலை புலிகளின் கட்டுபாட்டில் வந்தன.

### 30 பேர் பலி

சுமார் 2மணி நேரம் மிகவும் ஆக்ரோஷமாக நடந்த இந்தச் சண்டையில் இருதரப்பிலும் ஓர் அம்பியூலன்ஸ் டிரைவர் உட்பட 30பேர் பலி ஆனதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியானது.

இந்தச் சண்டையில் பேருந்து பயணிகள் 3 பேர் உட்பட பொது மக்கள் சிலரும் காயம் அடைந்தனர். குண்டுகள் தாக்கியதில் 3 கார்கள் சேதம் அடைந்தன.

### தளபதிகள் காயம்

காயம் அடைந்தவர்களில் கருணா கோஷ்டியை சேர்ந்த தளபதிகள் பாரதிதாஷன், ஜெயம் ஆகியோரும் அடங்குவார்கள். வயிற்றில் பலத்த காயம்டைந்த பாரதிதாஸன் மட்டகளப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டார்.

காயம் அடைந்த விடுதலை புலிகள் 6பேர் சிகிச்சைக்காக வாழைச்சேனை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காயம் அடைந்த விடுதலை புலிகள் 6 பேர் சிகிச்சைக்காக வழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு 2 பெண் விடுதலைபுலிகள் உயிரிழந்தனர். அவர்களுடைய உடல்களைக் கருணா ஆதரவாளர்கள் பெற்றுச் சென்றனர்.

கருணாவின் உதவியாளர் வரதன் மட்டகளப்பு வைத்திய சாலைக்கு சென்று அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களைப்பார்தது ஆறுதல் கூறினார்.

### அண்ணன் தப்பினார்

கருணாவின் அண்ணன் ரெக்கி என்ற விநாயக மூர்த்தி சிவநேசதுரை, மன்கர்னி முதல் வெருகல் வரையிலான வாழைச்சேனை பகுதியின் தளபதியாக இருந்து வந்தார். தாக்குதலின் போது அவன் தப்பி சென்று விட்டதாக தகவல் வெளியானது.

### 300 பேர் சரண்

கதிரவேலியில் காயம் அடைந்த கருணா ஆதரவாளர்களை மீட்க முயன்ற ஆம்புலன்ஜ் டிரைவர் ஒருவர் நிலக் கண்ணிவெடியில் சிக்கிபலியானார்.

இந்த போரின் போது வெருகல் ஆற்றின் தென் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கருணா ஆதரவாளர்களில் 300 பேர் தங்களிடம் சரணடைந்தாக விடுதலை புலிகள் அறிவித்தனர்.

சரண் அடைந்தவர்கள் அவர்களுடைய பெற்றோரிடம் ஒப்படைக்கபடுவார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்.

விடுதலை புலிகளுக்குள் போர் ஏற்பட்டிருப்பதை தொடர்ந்து நாட்டில் இராணுவத்தினரும் பொலிஸாரும் உஷார் படுத்தப்பட்டனர் . அவர்கள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

### மீண்டும் ரத்த ஆறு

தனி நாடு கேட்டு போராடி வரும் விடுதலை புலிகளுக்கும் அரசுக்கும் இடையே 2002ஆம் ஆண்டு போர் நிறுத்தம் நடந்ததை தொடர்ந்து நாட்டில் கடந்த 2 ஆண்டுகளாக துப்பாக்கி சத்தம் ஓய்ந்து அமைதி திரும்பியது.

அந்த அமைதி தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று எல்லோலாரும் எதிர்பார்த்து இருந்த நிலையில் அங்கு திடீரென்று விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட மோதல் காராணமாக மீண்டும் ரத்த ஆறு ஓடும் சூழ்நிலை உருவாகியது.

பிரபாகரன் படைகளுடன் மோதிய கருணாவின் படைகள் பின்வாங்கின. கருணா வெளிநாட்டுக்குத் தப்பியோடினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரான பிரபாகரனுக்கும் அந்த இயக்கத்தின் கிழக்குப் பிராந்திய தளபதி கருணாவுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் இரு தரப்புக்கும் இடையே போராக மாறியது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இருதரப்பு புலிகளும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டன.

முதல் நாள் போரில் இருதரப்பிலும் 30 பேர் பலியானதோடு ஏராளமான பேர் காயமடைந்தனர்.



பிரபாகரனுடன் கருணா நட்புடன் இருந்த நேரத்தில் எடுக்கப்பட்ட படம். பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் உடன் இருக்கிறார்கள்.

(தொடரும்)





கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் உதவித்திட்ட நிகழ்வும் உதவித்திட்டம் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 35 மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாவும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# 76 பேர் தப்பியோட்டம்

## 2015.01.01-2015.08.31 வரையான தகவல்கள்

| விபரம் | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|
| விடுவிக்கப்பட்ட ஆயுள் கைதிகள் | -- | -- | 6008 |
| ஆயுள் கைதிகள் | 22 | 250 | 272 |
| ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள கைதிகள் | 11 | 99 | 110 |
| மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் | 04 | 488 | 492 |
| மரண தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ளோர் | 24 | 596 | 620 |
| சிறையிலிருந்து தப்பியோடியோர் (கைதி- 52, சந்தேக நபர்கள்-24) | -- | -- | 76 |
| மீண்டும் கைது செய்யப்பட்டோர் (கைதி- 01, சந்தேக நபர்கள்-02) | -- | -- | 03 |
| தடுத்து வைக்கப்பட்ட போது இறந்தோர் | 02 | 54 | 56 |
| வெளிநாட்டு கைதிகள் | 10 | 53 | 63 |
| வெளிநாட்டு சந்தேக நபர்கள் | 06 | 112 | 118 |
| தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈயினர் | 05 | 204 | 209 |
| வீட்டு விடுமுறையில் அனுப்பப்பட்ட கைதிகள் | -- | -- | 419 |

2015 ஆம் ஆண்டு முதல் எட்டு மாதங்களில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் மற்றும் விளக்கமறியல் உத்தரவின் பேரில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களின் 76 பேர் தப்பியோடியுள்ளனர் என்று சட்டம் மற்றும் தெற்கு அபிவிருத்திஅமைச்சு அறிவித்துள்ளது.

இதில் கைதிகள் 52 பேரும் சந்தேக நபர்கள் 24 பேரும் அடங்குகின்றனர் என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது.

சிறைக்கைதிகள் சிறைகளுக்கு வைக்கப்பட்டிருத்தலுக்குப் பதிலாக புனர்வாழ்வின் மூலம் கைதிகளின் உழைப்பை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பை பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் புனர்வாழ்வு பெறும் கைதிகளின் தண்டணைக் காலம் முடிவடைந்து சமூகத்துக்குள் நுழையும் போது நற்பண்புகள் நிறைந்த திறமையுள்ள நபராக உருவாக்குதல் இதன் முன்னுரிமை எதிர்பார்ப்பாகும். அதற்கமைய மீளாய்வு காலத்தில் 222, 917 பேர் இணைக்கப்பட்டு 5 ஆயிரத்து 101 புனர்வாழ்வு செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. அதற்காக 1,301,168 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது. (இ

## இரண்டு மாணவர்கள் உட்பட மூவர் விபத்தில் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைககிளைச் செலுத்திச் சென்ற மாணவர்கள் இருவர உட்பட மூவர் பலியாகினர். மற்றொரு குடும்பஸ்தர் படு காயமுற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மட்டக்களப்பு-பொலநறுவை மாவட்டங்களின் எல்லைக் கிராமமான வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள மட்டக்களப்பு- கொழும்பு நெடுஞ்சாலையில் உள்ள ஜெயந்தியாய எனுமிடத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 6.20 மணியளவில் இடம்பெற்று ள்ளது.

ஜெயந்தியாய கிராமத்தைச் சேர்ந்த 10ஆம் ஆண்டில் கல்வி கற்கும் கரீம் ஹஸ்மிர் (வயது-16), சனூஸ இம்தாத் (வயது- 16) மற்றும் கூலித் தொழிலாளியான அதே கிராமத்தைச் சேர்ந்த நிஸ்தார் மிஸ்பாக் (வயது-20) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். (இ-5)

## பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நகுலன் சஞ்சிகை வெளியீடும் இன்று காலை 9 மணியளவில் பாடசாலை முன்றலில் நடைபெறும்.


அதிபர் தர்மபுத்திரன் தயாணந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் மா.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 766

Search for people, places and things | Nagendram Home

### நிசாந்தன்




### ராதி

இன்றைக்கு ஆன்ட்ரொய்டு போன்ல பேஸ்புக்
வாட்ஸ்அப் யூஸ் பண்றவன்லாம்
ஒரு காலத்துல 1100 போன்ல பாம்பு கேம்
விளையாடிய பயலுகதான்



### ரோகினி

சோப்பு கிருமிகளைக்
கொல்லும்..ன்னு சொல்றாங்க...!
ஆனா,
அடுத்தவன் சோப்பை
பயன்படுத்தினா
கிருமி
தொத்தும்..ன்னு
சொல்றாங்க...
சோப்பில கிருமி எப்படி வாழும்?



### புகழ்

"நீங்க புக்ஸ், யூனிபார்ம், ஷூ, சொக்ஸ், பெல்ட்,
எல்லாமே இங்க ஸ்கூல்லதான் வாங்கணும்"
அப்போ "படிப்பு"?????
"அதுக்கு வெளியே டியூஷன் வைச்சுக்குங்க"



### கருணாகரன்



சொந்த பந்தம் கூட வாசல்படியிலேயே
நிப்பாட்டி பேசி அனுப்புற இந்த உலகத்துல
பஸ் கண்டக்டர் மட்டும் அக்கறையா படியில
நிக்காத உள்ள வா ன்னு அழைக்கிறாரு...!

### அருள்ராஜ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# எலிகள் போட்ட ஐடியா!

ஊருக்கு ஒதுக்குப் புறமான ஒரு வீட்டில், எலிகள் மிகவும் சுதந் திரமாக வாழ்ந்து வந்தன. வீட்டின் அருகில் இருந்த நிலங்களில் உள்ள தானியங்களைத் தின்று மகிழ்ச்சியோடு வாழ்ந்தன.

ஒருநாள் அந்த வீட்டிற்கு அழையாத விருந்தாளியாக கொழுத்த பூனை வந்து சேர்ந்தது. அதன் இஷ்டப்படி எலிகளை வேட்டையாடிக் கொன்று தின்றது.

எலிகள் உயிர் பிழைப்பதற்காகத் தப்பி ஓடின. வீட்டின் ஒரு மூலையில் அனைத்தும் ஒன்று சேர்ந்தன. அவை கூட்டம் போட்டுத் தங்கள் குறைகளைக் கூறின.

வயதான எலி ஒன்று, "பிள்ளைகளே! கவலைப்படாதீர்கள். இப்போது நாம் இங்கு கூடியுள்ள பொந்துதான் மிகவும் பாதுகாப்பாக இருக்கும். எனவே, முடிந்தவரை நாம் வெளியே செல்லாமல் இங்கேயே இருந்து விடுவோம்!" என ஆலோசனை வழங்கியது.

அத்திட்டம் நல்லதாக இருப்பதால் அதனை அனைத்து எலிகளும் ஏற்றுக் கொண்டன. எலிகள் யாவும் வளைக்குள்ளேயே இருந்தன. எலிகளின் நடமாட்டம் குறைந்ததால் பூனைக்கு இரை கிடைக்காமல் போனது.

எனவே, மயங்கியது போல் நடித்தது. பூனை இறந்து விட்டது என நினைத்து, எலிகள் வெளியே நடமாட ஆரம்பிக்கும். அபபோது எலிகளைப் பிடித்து விடலாம் எனவும் தனக்குள் கணக்குப் போட்டது.


மயங்கியது போல் நடித்த பூனை, அப்படியே தூங்கியும் விட்டது. எவ்வளவு நேரம் தூங்கியதோ பாவம், பசிக்களைப்பில் அதிக நேரம் தான் தூங்கி விட்டது.

அதிகப் பசியுடன் கண்விழித்துப் பார்த்தது, சற்று தூரத்தில் எலிகள் இஷ்டம் போல் விளையாடிக் கொண்டிருந்தன.

"ஆகா எவ்வளவு தைரியமாக இவை விளையாடுகின்றன. இவைகளை விட்டேனா பார், இன்று நமக்கு நல்ல இரைதான்!' என மகிழ்ந்து பூனை தாவிக் குதித்தது.

திடீரென வந்த மணியோசையைக் கேட்ட எலிகள் தலை தெறிக்க ஓடித் தப்பியது. பூனைக்கும் ஒரே ஆச்சரியமாகிவிட்டத

மீண்டும் ஓடியது, மணியோசை எழுந்தது. இந்த மணியோசை எங்கிருந்த வந்ததென ஆராய்ச்சி செய்தது. பூனை தூங்கும் போது அதன் கழுத்தில் மணியைக் கட்டி விட்டன கெட்டிக்கார எலிகள். இதை அறியாத பூனை மணியை கழட்டி எறிய முடியாமல் தவியாய் தவித்தது.



## 07.2016 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1798 - நெப்போலியனின் படைகள் எகிப்தை அடைந்தன.
- 1825 - ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.
- 1851 - ஆஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூ சவுத் வேல்சில் இருந்து பிரிக்கப்பட்டது.
- 1862 - ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது.
- 1867 - பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம், 1867 கனடாவின் அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது் ஜோன் மாக்டொனால்ட் பிரதமராகப் பதவியேற்றார்.
- 1873 - பிரின்ஸ் எட்வேர்ட் தீவு கனடாக் கூட்டமைப்பில் இணைந்தது.
- 1876 - சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.
- 1881 - உலகின் முதலாவது அனைத்துலக தொலைபேசித் தொடர்பு கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரான்சில் சொம் என்ற இடத்தில் இடம்பெற்ற சண்டையின் முதல் நாளில் 20,000 பிரித்தானிய வீரர்கள் கொல்லப்பட்டனர், 40,000 பேர் காயமடைந்தனர்.
- 1921 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - ஏபிசி (அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - சீனர்களின் குடியேற்றத்தை கனடா நாடாளுமன்றம் தடை செய்தது.
- 1947 - இந்தியாவுக்கு முழு விடுதலையை ஓகஸ்ட் 15 ஆம் நாளன்று வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.
- 1960 - இத்தாலியிடம் இருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.
- 1960 - கானா குடியரசானது.
- 1962 - ருவாண்டா விடுதலை அடைந்தது.
- 1962 - பெல்ஜியத்திடம் இருந்து புருண்டி விடுதலை அடைந்தது.
- 1967 - தேய்வழிவுப் போர் தொடங்கப்பட்டது.
- 1967 - ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1970 - ஜனாதிபதி யாஹ்யா கான் மேற்கு பாகிஸ்தானில் மாகாணங்களை அமைத்தார்.
- 1976 - மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.
- 1978 - அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொதுநலவாயத்துக்குக் கீழ் சுயாட்சி பெற்றது.
- 1979 - சோனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.
- 1990 - கிழக்கு ஜேர்மனி டொச் மார்க்கை தனது நாணய அலகாக ஏற்றுக் கொண்டது.
- 1991 - பிராக்கில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் வார்சா ஒப்பந்தம் அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.
- 1997 - மக்கள் சீனக் குடியரசு ஹொங் கொங்கில் தனது ஆட்சியை ஆரம்பித்தது. 156 ஆண்டு கால பிரித்தானிய குடியேற்ற ஆட்சி முடிவடைந்தது.
- 2002 - சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
- 2002 - தெற்கு ஜெர்மனியில் இரண்டு விமானங்கள் வானில் மோதியாதில் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - காசினி-ஹியூஜென்ஸ் விண்கலம் சனிக் கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.
- 2006 - கொழும்பில் சுதந்திர ஊடகவியலாளர் சம்பத் லக்மால் சில்வா இனந் தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள

- 1924 - தி.ச.வதராசன், ஈழத்து மறுமலர்ச்சிஎழுத்தாளர். (இ. 2006)
- 1927 - சந்திரசேகர், 11வது இந்தியப் பிரதமர்.
- 1929 - ஏ. எம். ராஜா, பின்னணிப் பாடகர். (இ. 1989)
- 1935 - டி. ஜி. எஸ். தினகரன், இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புனர்.
- 1961 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை. (இ. 2003)
- 1961 - டயானா, வேல்ஸ் இளவரசி .(இ. 1997)
- 1961 - கார்ல் லூயிஸ், அமெரிக்க ஓட்ட வீரர்.


### இறப்புகள

- 1965 - வால்ரர் ஹமொண்ட் - ஆங்கில துடுப்பாளர். (பி. 1903)
- 2001 - நிக்கலாய் பாசொவ், ரஷ்ய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1922)
- 1971 - வில்லியம் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர். (பி. 1890)

### சிறப்பு நாள

- கனடா - கனடா நாள்.
- கானா - குடியரசு நாள். (1960)
- சோமாலியா - விடுதலை நாள். (1960)
- ருவாண்டா - விடுதலை நாள். (1962)
- புருண்டி - விடுதலை நாள். (1962)
- கோடை பண்பலை வானொலி என்ற நிலையம் தொடங்கிய நாள். (2000)

## தி.ச.வரதராசன்



வரதர் என அழைக்கப்படும் தி.ச.வரதராசன் சிறுகதை, புதுக் கவிதை, குறுநாவல், இதழியல், பதிப்புத்துறை என இலக்கியத்தின் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். ஈழத்து இலக்கியத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர் என அழைக்கப்பட்டவர். 1924 இல் பொன்னாலையில் சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் நான்கு குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர் வரதர். வரதர் ஒரு புலாலுண்ணாத சைவ வேளாளர். இவரது தந்தை ஒரு வர்த்தகர். சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பை மீண்டும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். வரதர் தனது 27ஆவது வயதில் மகாதேவியம்மாவை திருமணம் செய்தார். வரதர் ஆசிரியையான தேன்மொழியுடன் இறுதிவரை வாழ்ந்தார். இவரது முதற் சிறுகதையான கல்யாணியின காதல் ஈழகேசரியில் வெளியானது. ஜூன் 13, 1943 இல் ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான "தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்" தொடங்கப்படக் காரணமாயிருந் தோரில் இவர் ஒருவர். இதே ஆண்டில் (1943) ஈழகேசரியில் வரதர் எழுதிய ஓர் இரவினிலே எனும் வசன கவிதையே ஈழத்தின் முதற் புதுக்கவிதை எனப்படுகிறது. வரதரின் முதற் சிறுகதைத் தொகுதியான கயமை மயக்கம் 1960இல் வெளியானது.

# ஜெய்ப்பூரை வாழ்த்தி வணங்குகின்றோம்

**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 29 ஆண்டு காலசேவை பூர்த்தியாவதை முன்னிட்டு இவ் வாக்கங்கள் இங்கு பிரசுரமாகின்றன.**

விஞ்ஞானத்தின் விபரீத அன்னை பிறப்பித்த
அரக்கர்கள் கணப் பொழுதில் எம் கால்
கரங்களை பறித்தன.
மண்ணிற்கு நல் இயற்கை உரமாக எம்
தசைகளும் நரம்புகளும் எலும்புகளும்
உக்கிப் போயின
யுத்த எச்சத்தின் வடுக்களாக திணிக்கப்
பட்டதே வலுவிழப்பும் எம் வாழ்வில்
மூன்று காலிலும் முடவர் நாமத்திலும் யாம்
பெற்ற துயர் சொல்லில் தீராது அது மட்டுமா
தொற்றியும் தொற்றாமலும் மெய்வருத்தி
மெய்யென்ற மேனியை பொய்யாக்கி
கொடிய நோய்கள் விபத்துக்கள் எம்மை
கொல்லாது.
உருவமிருக்க உள்ளரித்தே உருவாக்கிய
ஊனுடலின் ஊனத்தை ஊழ்வினைப் பயனோ
என உறங்காது உழன்ற எம் இரவுகள் தான்
எத்தனை எத்தனை அஸ்தமனமாகிய எம்
வானிலும் கிழக்கு உதயத்தை தோற்றுவித்தது.
அன்பினால் அத்திபாரமிடப்பட்ட ஆலயமாம்
எம் ஜெய்ப்பூர் பிரார்த்தனை செய்யும்
உதடுகளை விட சேவை செய்யும் கரங்களே
உன்னதமானவை என ஈடு இணையற்ற
புதியதோர் வாழ்வை மீண்டும் எமக்குத் தந்தாள்
எம் ஜெய்ப்பூர் தாய் விஞ்ஞானத்துடன்
விள்ளயாடி வினைத்திறன் செயற்றிறனுடன்
செயற்கை அவயவத்துடன் குறை நிவர்த்தி
உறுப்புகளும் இயற்கையோடு நன்கு நடமாட
சரி அளவில் தரமான உபகரணங்களும்
உடலியக்கம் பேணும். இயன்மருத்துவமும்
உளவடு நீங்கி ஆற்றல் பெற
உளவளத்துணையும் வைத்தியசாலையிலும்
வீட்டிலும் நாடி தேடி வந்து பரிதவிக்கும்
எமக்கு பக்குவமாக பரிவுடன் புனர்வாழ்வுக்கு
பாதை பல காட்டுகின்றீர் சமூகத்துடன்
இரண்டறக்கலக்க கல்வியில் கரை காண கல்வி
ஊக்குவிப்பு மானியமும் சுய தொழிலிற்கு
சுழற்சி முறைக்கடனும் தொழில் பயிற்சிகளும்
எம்மை வீரர் வீராங்கனையாக்க நீர் உருவாக்கிய
விளையாட்டுப் போட்டிகள் தான் எத்தனை
சுகவாழ்விற்கு வழிகாட்ட விழிப்புணர்வு என
அப்பப்பா சொல்லி முடிக்கும் தரமோ
வார்த்தைகளில் அடக்கும் எல்லையோ இல்லை
உன் தார்மீகப் பணி கருணைக்கும் சேவைக்கு
மென பிறந்த புகழ்பூத்த இரு வைத்திய
கலாநிதிகள் தம்
ஓய்வுக் காலத்திலும் உழைக்கின்றனரே
ஓய்வு உறக்கம் தவிர்த்து எம் புண்ணிய
வாழ்விற்காய் தவமின்றி கிடைத்த
வரங்கள் அல்லவா எம் அன்னையர்கள்.
அவர் படையணியில்
சேவையாற்றும் சேவகர்களாம் எம்
சகோதரர்களையும் அகவை இருபத்தொன்பதில்
பயனாளிகளும் நாம் மட்டுமல்ல நம்
குடும்பமும் நாமும் வாழும் சமூகமும்
இருகரம் கூப்பி இறைவன் ஆசீர் உமக்காய்
கேட்டு நாவாற நன்றியுடன் மனமார
மகிழ்வுடன் வாழ்த்தி வணங்குகின்றோம்.

**(தே.சூசைதாசன், யாழ்ப்பாணம்)**

# மறுபிறவி கண்டோம்

ஆண்டு பல தோன்றி அறுபது வயது
சென்றதும் நீரிழிவு என்னும் கொடிய
நோயினால் மரியகொறற்றி என்னும் எனது
உடலுறுப்பினை இழந்த போது இனி
மறுபிறப்பில் தான் வருமோ
என்று கலங்கிய நேரம்!
மருத்துவ மனையே சோகமாக மாறியது!
யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் எனும் இடத்தில்
செயற்கை அவயவம் செய்யும் சிற்பிகளின்
உறவுகளால் மறுபடி வந்து விட்டது நான்
இழந்த உடல் உறுப்பு அறுபது வருடங்கள்
வாழ்ந்த வாழ்க்கைபோல் இருபது நாளிலே
தந்தது ஜெய்ப்பூர் தாய்! மறுவாழ்வு வழங்கும்
ஜெய்ப்பூர் தொண்டர்களால் கண்ணீரை
களைந்து களிப்புடன் எழுந்தோம் !
ஜெய்ப்பூர் வளவாளர்களே வளமுடன்
வாழ்க.

**யூலியஸ் மரியகொறற்றி, யாழ்ப்பாணம்.**

# சதித்திட்டங்களை வகுத்தவர்கள் யார்?

## முஸ்லிம்கள் விரைவில் அறிவார்கள் என்கிறார் மகிந்த

**(கொழும்பு) — அளுத்கம சம்பவத்துக்குப் பின்னணியில் இருந்தவர்கள் யார்? உண்மையான சூத்திரதாரிகள் யார், சதித்திட்டங்களை வகுத்தவர்கள் யார் என்பதை முஸ்லிம்கள் இன்னும் கொஞ்ச நாளில் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தெஹிவளை நகர பிதா தனசிரி அமரதுங்கவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள முஸ்லிம் நல்லிணக்கம் எமக்குப் புதிதான ஒன்றல்ல. ஆரம்பகாலம்முதல் நாம் முஸ்லிம்களோடு இணக்கமாக வாழ்ந்திருக்கின்றோம். எமது மூதாதையர்கள்தான் எமது மெதமூலன கிராமத்துக்கு வயலுக்கு அப்பால் இருக்கின்ற மெத்தஸ்முல்ல கிராமத்தில் ஆரம்பத்தில் முஸ்லிம்களைக் குடியேற்றினார்கள் என்ற வரலாறை நான் என்றும் மறக்கமாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இறக்குமதி ,விற்பனை,பயன்பாடு

# பீடைக் கொல்லிகளுக்கு ஜனாதிபதி உடனடித்தடை

சகல வகைகளையும் சேர்ந்த முழுமையான பீடைக் கொல்லிகளை நாட்டுக்கு இறக்குமதிசெய்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்தலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடைசெய்யுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நச்சுத்தன்மையற்ற உணவுகளைப் பெற்றுக்கொடுத்து நாட்டு மக்களை சுகதேகிகளாக ஆக்குவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின பேரில் அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

பீடைக்கொல்லி, கிருமி நாசினி மற்றும் இரசாயன பொருட்களை அதிகளவு பயன்படுத்துவதன் காரணமாக மக்களின் சுகாதார நிலைமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் ஆரோக்கியத்திற்கு பாதிப்பாக அமையும் பீடைக்கொல்லியான கிளைபோசிட் பீடைக் கொல்லியை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்வதை தடை செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் கிளை போசியேட் அமோனியம் என்ற இரசாயன பீடைக்கொல்லி பல்வேறு வர்த்தக நாமங்களின் கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதிசெய்தல் மற்றும் விநியோகித்தல் இடம்பெறுவதாக தகவல் கிடைத்துள்ளதுடன், இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி எல்லா வகையான முழுமையான பீடைக் கொல்லிகளினதும் இறக்குமதியை தடைசெய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (இ-10)

# அதிபர்கள் மாகாண ரீதியாக ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்தீபு

தகுதியுடைய அதிபர்களுக்கு பாடசாலைகளை பெற்றுக் கொடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாகாண ரீதியாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அதிபர் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் வட மேல் மாகாணத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் பியசிறி பிரணாந்து தெரிவித்துள்ளார்.

அதிபர் குறைபாடுகள் காணப்படும் பாடசாலைகள் தொடர்பான மிகச் சரியான அறிக்கைகளை சில வலயக் கல்விக் காரியாலய அதிகாரிகள் மறைத்துள்ளனர். தற்பொழுது, அதிபர் காணப்படாத சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிபர்களாக பதவி வகித்து வருகின்றனர். இவர்களை தொடர்ந்தும் அந்தப் பதவிகளில் வைத்திருப்பதற்காகவே இவ்வாறு சரியான அறிக்கைகளை மறைத்துள்ளதாகவும் அதிபர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

தற்பொழுது, நியமனம் பெற்றுள்ள புதிய அதிபர்கள் 3 ஆயிரத்து 859 பேரும் இந்த பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாகவும் அச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

# செய்தித்துளிகள்

## நிறுவுநர் நாள் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். அதிபர் எம். இந்திரபாலா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இரா தா கிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். சிவானந்தராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## அருளுரை வெள்ளிக்கிழமை

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்யாவினால் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த அருளுரை நிகழ்வு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும். வழமைபோல் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று

வடமராட்சி பருத்தித்துறை வியாபாரி மூலை ஸ்ரீ பத்திர காளி அம்பாள் சமேத ஆதி சிவ வீர பத்திரர் சுவாமி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். 8 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும். (இ-5-60)

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

கரணவாய் மண்டான் கல்லுவம் ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெறும். 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். (இ-5-60)

## நடராஜ இராமலிங்க வித்தியாலய மழலைகள் கலைச்சங்கமம் நாளை

யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மழலைகளின் கலைச் சங்கமம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய கலையரங்கில் நடைபெறும். அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா கலந்து கொள் வதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் , யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மைதிலி தேவராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறும். (இ-5)

## மானிப்பாய் இந்துவில் நாடகவிழா இன்று

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா இன்று காலை 9 மணியள்வில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் மே.இந்திரபாலா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் மொழிபெயர்ப்பு கற்கைநெறி இணைப்பாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியர் எஸ்.வி.தயாநிதி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## யாழ். இந்துக்கல்லூரியில் தமிழ்மொழித்தின நிகழ்வு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தமிழ்மொழித்தின நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாணவன் சி.விஷாகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவு ள்ளார். குழு, இசை, வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம், பேச்சு, நாடகம் என்பனவும் இடம்பெறும். (இ-5)

# உள்ளக விசாரணையில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க வேண்டும்

## சர்வதேச நாடுகள் ஐ.நாவில் வலியுறுத்து

(ஜெனிவா)


**ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேசமனித உரிமைகள் அமைப்புகள் அனைத்தும் இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு மிகவும் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென வலியுறுத்தின.**

அமெரிக்கா, நெதர்லாந்து, கனடா, ஜப்பான், நோர்வே, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கொரியா உள்ளிட்ட நாடுகளும் சிறுபான்மை உரிமைக்கான அமைப்பு, சர்வதேச ஜூரிகள் ஆணைக் குழு, உள்ளிட்ட தரப்புக்களும் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்க வேண்டுமென வலியுறுத்தின.

முதலில்மனித உரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசைன் தனது அறிக்கையை வெளியிட்டதன் பின்னர் இலங்கையின் சார்பில் அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார்.

அதன் பின்னர் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

### கனடா பிரதிநிதி




ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை வரவேற்கிறோம். பிரேரணை ஊடாக இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஊக்குவிக்கிறோம். குறிப்பாக நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டின் இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறோம். பொறுப்புக்கூறல் முறையானது சுயாதீனமாக இருக்க வேண்டும். அதில் அர்த்தமுள்ள சர்வதேச பங்களிப்பும் அமைவதானது பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கை கொள்ள செய்யும். கனடா இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக இருக்கிறது என்றார்.

### ஜப்பான் பிரதிநிதி




இலங்கையின் உள்ளக விசாரணையின் பொறி முறையில் சர்வதேச பங்களிப்பும் அவசியமானதாகும். இது மிகவும் முக்கியத்துவம் மிக்கது. இதற்காக ஜப்பான் இந்த செயற்பாட்டில் பங்கேற்பதற்காக சட்டத்தரணி ஒருவரை வழங்குவதற்கு தயாராக இருக்கிறது என்றார்.

### ஜெனிவாவுக்கான அமெரிக்க தூதுவர்




இலங்கையின் தற்போது அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் நீதி பொறி முறையில் இன்னும் பல படிகள் பயணிக்க வேண்டியுள்ளது. இதற்கு தேவையானமுழுமையானஉதவிகளை செய்வதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது என்றார்.

### டென்மார்க் பிரதிநிதி



இலங்கை அரசாங்கம் மனித உரிமை பாதுகாப்பு, சிவில் சமூக பாதுகாப்பு என்பவற்றில் முன்னெடுத்துவரும்செயற்பாடுகளை பாராட்டுகிறோம். பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டில் சர்வதேச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென இலங்கையை டென்மார்க் வலியுறுத்துகிறது. வடக்கு கிழக்கு மனித உரிமை செயற்பாட்டில் முன்னேற்றகரமாக செயற்படுமாறு கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.


### நோர்வே பிரதிநிதி




கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அமுலாக்குவதில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களை வரவேற்கிறோம். அதேவேளை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கான பொறிமுறையில் பொது நலவாய மற்றும் சர்வதேச நாடுகளின் நீதிபதிகள் வழக்கறிஞர்கள் விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடம்பெற வேண்டுமென வலியுறுத்துகின்றோம் என்றார்.

இலங்கை இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே

### ஐரோப்பிய பிரதிநிதி



பயணித்துக் கொண்டிருக்கிறது. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க பொறிமுறை யில் சர்வதேச பங்களிப்பு என்பது மிகவும் முக்கியமானதாகும். பயங்கரவாத தடைச் சட்டத்தையும் நீக்குமாறு நாம் வலியுறுத்துகிறோம். வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கு மாறும் சிவில் செயற்பாடுகளிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறும் காணிகளை மீள வழங்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் என்றார்.

### ஆஸி பிரதிநிதி



அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்கின்றோம். ஆனால், நல்லிணக்க செயற்பாடுகளின் விரைவான நடைமுறை அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்.

### நியூஸிலாந்து பிரதிநிதி



இலங்கை பல முன்னேற்றங்களை வெளிக்காட்டியுள்ளது. இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறுமை செயற்பாட்டின் சர்வதேச நாடுகளின் நீதிபதிகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்.

### அனைத்து விதமான அநீதிகளுக்கும் எதிரான அமைப்பின் பிரதிநிதி

பிரேரணைக்கு அனுசரணை வழங்கி அர்ப்பணிப்பை வெளிக்காட்டிய அரசாங்கத்தை பாராட்டு கின்றோம். காணி மீள் வழங்குவதில் ஏற்படும் தாமதம் பாதுகாப்பு மறுசீரமைப்பு குறைபாடு, குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல், பயங்கர வாத தடைச் சட்டம் நீடிக்கப்படுகின்றமை, தமிழ் மக்கள் சித்திரவதைக்கு உள்ளாகின்றமை, அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தாமதம் என்பன காணப்படுகின்றன. எனவே அரசியலமைப்பு மறுசீரமைப்பு அரசியல் தீர்வு குறித்து கட்டாயமாக அவதானம் செலுத்த வேண்டும். அதிகாரப் பகிர்வு மாதிரி ஒன்று இதில் ஆராயப்பட வேண்டும். உள்ளக விசாரணை பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பு என்பது அவசியமானது என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றோம். சர்வதேச பங்களிப்பானது பிரேரணை அமுலாக்கத்தை வெற்றியடைச் செய்யும் என்றார்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்

– திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ரோசம் கெட்டவன் ராசாவிலும் பெரியவன்

தமிழ்ப் பழமொழிகளின் கருத்துச் செறிவு பற்றி ஆறுதலாக இருந்து ஆராய்ந்தால் அதன் தத்துவார்த்தம் பட்டவர்த்தனமாகப் புரியும்.

அந்தளவிற்கு தமிழ்ப் பழமொழிகள் மிகச் சிறந்த தத்துவ விசாரங்கள். எனினும் இன்றைய சூழ்நிலையில் பழமொழிகள் பற்றி எவரும் கருசனை கொள்வதில்லை.

வாழ்க்கையின் தத்துவத்தையே மறந்து போன போது தமிழ்ப் பழமொழிகளை மறந்து போவது ஆச்சரியமான விடயமன்று.

இருந்தும் ரோசம் கெட்டவன் ராச்ாவிலும் பெரியவன் என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு. அதன் பொருள் ஆழமானது. ரோசம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஒருவன் நினைப்பானாக இருந்தால், அவன் சிலவற்றை செய்ய முடியாமல் போகும்.

இப்படித்தான் வாழ்தல் என்ற எல்லைக் கோடுகள் அவனின் எல்லை தாண்டலைத் தடுக்கும். எனவே ரோசம் உள்ளவர்கள் ஒரு கட்டத்திற்கு அப்பால் தங்களின் மானம் குறித்தே சிந்திப்பர்.

இத்தகையவர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நினைப்பை கடுமையாகப் பின் பற்றுபவர்கள். ஆனால் ரோசம் கெட்டவர்கள் யார் என்ன பேசினாலும் அது பற்றி ஒருபோதும் கவலை கொள்ளமாட்டார்கள். அவனவன் பேசி விட்டுப் போகட்டுமே! நாம் நம்ம வேலை என்பதாக இவர்களின் காலம் கடந்து போகும். இத்தகையவர்கள் பொய் சொல்லவோ, திருகுதாளம் போடவோ ஒரு நாளும் தயங்க மாட்டார்கள். கூசாமல் பொய் உரைப்பது; உத்தரவாதம் வழங்குவது என்பதில் இவர்கள் முன்பின் யோசிக்கமாட்டார்கள்.

அட! செய்வதாக இருந்ததால்தானே சிந்தித்துப் பதில் கூற வேண்டும். மாறாக வாக்குறுதிகளை நிறைவேற்றும் பழக்க வழக்கங்கள் இல்லாத போது உத்தரவாதத்தையும் வழங்குவதில் இவர்கள் ஒரு போதும் தடுமாற்றம் கொள்வதில்லை.

அந்தந்த இடத்தில் பொய் உரைத்து; பொய்மையான உறுதி மொழிகளை வழங்கி அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து தப்பிக் கொண்டால் அது போதும் என்று நினைக்கின்றவர்கள்தான் இத்தகையவர்கள்.

இவர்களை இப்போது எங்கே? காணலாம் என்று யாராவது அறியும் ஆவலில் கேட்டால், ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் காண முடியும் என்பதே பதிலாகும்.

அட! இலங்கையில் பார்க்கக்கூடியவர்களை ஜெனிவாவில் போய்ப் பாருங்கள் என்று சொல்வது உங்களுக்கு நியாயமாக இருக்கிறதா? என்று நீங்கள் கேட்பதும் புரியாமல் இல்லை.

இருந்தும் இலங்கையில் இருந்து பிரதிநிதித்துவ அடிப்படையில் சென்றவர்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்குகின்ற உறுதிமொழிகள் தான் ரோசம் கெட்டவை என்று சொல்லலாம்.

என்ன செய்வது? இவர்கள் அங்கு சென்று எதைக் கூறினாலும் அதை ஆமாம் போட்டு கேட்கும் அளவில் ஐ.நா அதிகாரிகள் இருக்கின்றனர்.

தமிழர்களுக்கு பாதிப்பு என்பதற்காக நாம் துள்ள முடியுமா?

மனித உரிமை; மனித உரிமை மீறல் என்றால் அதுவும் எங்களுக்குத் தேவையான இனமாக-கனமாக இருக்க வேண்டும் என்பது ஐ.நாவின் முடிவாக இருக்கும் வரை ரோசம் கெட்டவர்கள் ராசாவிலும் பெரியவர்களாகவே இருப்பார்.

இத்தகையவர்கள் செய்வோம் என்பார்கள். எதுவுமே நடக்கமாட்டாது என்பதுதான் உண்மை.

# கோப் அறிக்கையின் தகவல்களை மக்களுக்கு வெளியிட வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர் நியமிக்கப்படுவதன் மூலம் மாத்திரம் அங்கு நடந்த முறைகேடுகளுக்கு தீர்வு கிடைக்காது என்ற அர்ஜுன் மகேந்திரன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள கோப் அறிக்கையின் தகவல்களை மக்களுக்கு வெளியிட வேண்டும் எனவும ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க இதனை கூறியுள்ளார்.

கோப் குழுவின் தலைவர என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் கந்துன்நெத்திக்கு இதற்கு பொறுப்பு உள்ளது.

கந்துன்நெத்தி குழுவின் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலைமை இருக்குமாயின் அதற்கான காரணத்தை வெளியிட வேண்டும்.

பணிகளை செய்ய முடியாமைக்கு அரசியல் அழுத்தங்கள் காரணமா அல்லது அவரது கட்சியின் செயற்பாடுகளுக்குள் அந்த நடவடிக்கையை முன்னெடுப்பதில் இருக்கும் சக்கலா என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவது முக்கியமானது எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# விவாதப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகேயுள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம்பெறும் விவாதப் போட்டியில் நேற்று 30.06.2016 இல் நடைபெற்ற விவாதப் போட்டி முடிவுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**முதலாம் சுற்று :**

**போட்டி 1**

யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி (259 புள்ளிகள்), யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி (276 புள்ளிகள்)

**போட்டி 2**

கிளி/ இந்துக் கல்லூரி (236 புள்ளிகள்), யா/ இந்து மகளிர் கல்லூரி (260 புள்ளிகள்)

**இரண்டாம் சுற்று**

**தலைப்பு:**

யா/ இந்து மகளிர் கல்லூரி (250 புள்ளிகள்), யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி (275புள்ளிகள்)

**மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகிய அணி**

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

**நடுவர்கள்:**

**பிரதான நடுவர்:** கலாநிதி. (செல்வி) சிவதர்சினி இராசலிங்கம் B.Sc (Hons), M.Sc.Ph.D யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்.

**நடுவர் 2:** த.அஜந்தகுமார் B.A (Hons), M. Phil கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்

**நடுவர் 3:** பிரம்மகுமாா சிவஞானம் (மத்திய மாகாண சபை உறுப்பினர்) பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் மாத்தளை மாவட்ட இணைப்பாளர்

**இன்றைய போட்டி விபரங்கள் (01-07-2016)**

காலை 9.00 – 1.00

**போட்டி 1** பணிவு அதிகம் அவசியமாவது இளையவர் களுக்கா? மூத்தவர்களுக்கா?

**போட்டி 2** வெற்றியின் முதல்படி அமைதியா? பொறுப்புணர்ச்சியா? (இ-5)




### கருணை மிக்க இறைவன்

❖ உங்களின் இறைவன் கருணை பொழிவதை தன் மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான். உங்களில் எவரேனும் அறியாமையால் ஒரு தவறை செய்துவிட்டு பின்னர் அதற்காக மன்னிப்புக்கோரி, மேலும் தன்னைத் திருத்திக் கொண்டால் திண்ணமாக இறைவன் (அவரை) மன்னித்து விடுகின்றான் மேலும் அவருடன் இரக்கத்தோடு நடந்து கொள்கின்றான்.

❖ இறைவன் தான், தன் அடியார் மீது தெளிவான வசனங்களை இறக்கிக் கொண்டிருக்கின்றான். உங்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக! உண்மை யாதெனில், இறைவன் உங்கள் மீது மிகுந்த பரிவும் கருணையும் கொண்டவனாயிருக்கின்றான்.

❖ (நபியே!) கூறுவீராக: தங்கள் ஆன்மாக்களுக்கு கொடுமை இழைத்துக் கொண்ட என் அடிமைகளே! இறைவனின் கருணை பற்றி நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். திண்ணமாக இறைவன் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகின்றான். அவன் பெரிதும் மன்னிப்பவனும், கருணையாளனும் ஆவான். திரும்பிவிடுங்கள் உங்கள் இறைவனின் பக்கம்.

**- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

# கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாக ஜூலை பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாக வடமாகாண கூட்டுறவு அமைச்சால் ஜூலை மாதம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

வடமாகாண கூட்டுறவு அமைச்சால் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு மே மாதம் 15ஆம் திகதியில் இருந்து 100 நாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தின் ஒரு திட்டமாகவே, கூட்டுறவாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, ஜூலை 01 தொடங்கி 31 வரையான காலப்பகுதி கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினாலும், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினாலும் வடக்கில் 69 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் செயற்படுத்தப்பட்டு வருகினறன. இக்கிராமிய வங்கிகளினால் பல்வேறு வகையான சேமிப்புத்திட்டங்கள் மற்றும் இலகு கடன் வசதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் வாடிக்கையாளர்கள் வடக்கில் பயன் பெற்று வருகின்றனர். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிரு ந்து 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** டச்சு வீதி, மீசாலை, வாகையடி, மயிலங்காடு, குப்பிளான், பொன்னாலை, காரைநகர், காரைநகர் இராணுவ கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** புதூர், சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, கொக்கிளாய், கிளிநொச்சி நகரம், திருநகர், இரணைமடுவிலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்தியவங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 651ஆவது படைப்பிரிவு முகாம், 652ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவ பாசறை II, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம், மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் (கச்சேரி), கிளிநொச்சி லங்காசதோச, கார்கில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களம், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிளளை ஐஸ் தொழிற் சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆதி விநாயகர் கோவில் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** பள்ளமடுவிலிருந்து கணேசபுரம் வரை, வெள்ளாங்குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எல்லையற்ற பொறுமையும் சாமர்த்தியமும்

கடவுளிடம் ஒரு வரம் பெறுவதற்கு நீ செல்வதாக வைத்துக கொள். வரம் பெறுவது ஒன்றே உன்னுடைய குறிக்கோளாக உள்ளபோது அது உன் அவசரத்தைக் காட்டுகிறது.

இன்னொருவர் கடவுள் எனக்கு ஏற்கனவே சொந்தம் என்று அறிவார். அவர் எதற்காகவும் அவசரப்படாமல் எல்லை யற்ற பொறுமையுடன் இருப்பார்.

**கேள்வி: கடவுளைச் சொந்தமாக்கிக் கொள்வது என்றால் என்ன?**

அது தெய்வீகமும் கடவுளின் படைப்பு முழுமையும் உன்னுடையவை என்பதை உணர்வது, பொருள் வேண்டு மெனில் கடைக்குச் சென்று பொருட்களை வாங்கி வருவதில் அவசரம் காட்டுகிறாய், வேகமாக வீடு திரும்புகிறாய். ஆனால் உன் வீட்டிலேயே அத்தனை பொருட்களும் ஏற்கனவே இருக்கும் பொழுது நீ நிம்மதியாக இருக்கிறாய்.

உன் அவசரம் உன்னைச் சமநிலையில் இருந்து பிறழச் செய்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்துகிறது. அதனால் என்றென்றும் எந்நிலையிலும் பொறுமையில் நிலைத்திரு" எல்லையற்ற பொறுமை கொள். அது கடவுள் உன்னுடைய வர் என்பதை உனக்கு உணர்த்தும். விழிப்புணர்வின் மூலமாகவும் சாதனையின் மூலமாகவும் நீ எல்லையற்ற பொறுமையைப் பெறலாம்.

**கேள்வி: பொறுமையை அடைய நாம் பொறுமையின் மையைக் கவனிக்கவேண்டுமா?**

ஸ்ரீஸ்ரீ: உன்னுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கவனிக்கவும். அதற்காக வருந்த வேண்டாம்.

நீ கடவுளின் ஒரு அங்கம் என்பதைப் புரிந்து கொண்டால் உரிமைக் கோரிக்கையை நிறுத்துகிறாய். உன் தேவைகளெல லாம் நிறைவேற்றப்படுவதை நீ அறிவாய்.

சாதாரணமாக நாம் மனதைத் துரிதப்படுத்துகிறோம். செயலில் நிதானமாக இருக்கிறோம். பொறுமையின்மை என்பது மனதை அவரசப்படுத்துவது; மந்தம் என்பது தாமதமாகச் செயற்படுவது.

ஆனால் இதற்கு மாறாக மனதில் பொறுமையையும் செயலில் சக்தியையும் உற்சாகத்தையும் கொள்வது சரியான வழியாகும்.

# ஆவரங்கால் மத்திய வி.க.நடத்தும் கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்









ஆவரங்கால்மத்தியவிளை யாட்டுக் கழகம் நடத்தும் பி பிரிவுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் அண் மையில் நடைபெற்ற போட்டி யில் நீர்வேலி ஐக்கிய விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து போட்டியிட்ட அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகம் 2:0 (25:20,25:19) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

அதனை அடுத்து இடம் பெற்ற இரண்டாவது போட்டி யில் கெருடாவில் விவேகா னந்தா விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து போட்டியிட்ட புத்தூர் வளர்மதி விளையாட் டுக்கழகம் 2:0(28:27, 26:25) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. அதனை அடுத்து இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் மூளாய் விக் ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து போட்டி யிட்ட புத்தூர் தமிழ்மதி விளை யாட்டுக்கழகம் 2:1 (16:25, 25:15,25:20) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.(கு)

## எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்

### யங்கம்பன்ஸ் வெற்றி



எவறெஸ்ட் வி.கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் புத்தூர் எவரெஸ்ட் வி.கழக மைதானத்தில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற இரண்டாவது போட்டியின் முதல் பாதியாட்டத்தில் இரு அணியும் கோல் போடாத நிலையில் இரண்டாவது பாதியை வேகமாக ஆரம் பித்தது. ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் நட்சத்திர வீரர் பிரகாஷ் அவரால் அவ் அணிக்காக ஒரு கோல் போடப்பட்டது. ஆட்டத்தின் நிறைவில் யங்கம்பன்ஸ் 1:0 என்று வெற்றீட்டியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## றோயல், சென். நீக்லஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

எவறெஸ்ட் வி.க. நடத்தும் வட மாகாண ரீதியிலான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் கடந்த24 ஆம் திகதி வெள் ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் அரியாலை வி.கழகத்தை 5:2 என்ற கோல் கணக்கில் றோயல் வி.கழக மும் மற்றுமொரு போட்டியில் சென்.மைக்கல் வி.கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் சென். நீக்லஸ் வி.கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (கு)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வற்றாப்பளை ம.வித்தி வெற்றி





முல்லைத்தீவு இரணைப்பாலை றோ.க. மகா வித்தி யாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு முல்லைத் தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 19 வயது பிரிவினருக் கிடையே அண்மையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாவது போட்டியில் வற்றாப்பளை ம.வி. 2:0 என்ற கோல்கணக்கில் உடையார்கட்டு ம.வி.இனை வெற்றி கொண்டுள்ளது. (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 9 வீரர்கள் 8 பந்து பரிமாற்றங்கள் மற்றும் அணிக்கு 7 வீரர்கள் 5 பந்து பரிமாற்றங்கள் என போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகள் யாவும் சர்வதேச விதிகளுக்கமைவாக கல்வி யங்காடு GPS மைதானத்தில் நடைபெறவுள்ளன. பதிவுக் கட்டணமாக 1000 ரூபா அறவிடப்படும். விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். தொடர்புக்கு:- 077 383 9120, 077 444 5242, 077 931 7674. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டிகள்

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த் தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டி யில் இளங்கதிர் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

இளவாலை யங்ஹென் றீசியன் விளையாட்டுக் கழ கம் நடத்தும் வட மாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக் கிடையில் நடத்தப்பட்டு வரும் ஹென்றீசியன்சவால்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யின் அரையிறுதி ஆட்டங் கள் நடைபெற்று வருகின் றன.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு மின் னொளியில் நடைபெறும் போட்டியில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழ கம் மோதவுள்ளது. (கு)

## சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? காலிறுதியில் வீனஸ், ஞானமுருகன்







சரஸ்வதியின் யாழின் கில் லாடி யார்? உதைபந்தாட்டத் தொடரின் நடைபெற்ற போட்டி யில் வெற்றி பெற்று ஞான முருகன், வீனஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறின.

அரியாலைசனசமூகநிலை யத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன் னிட்டுநடத்தப்படுகின்றஅணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட் டப் போட்டியின் முதலாவது போட்டியில் திருக்குமரன் வி.க. 1:4 என்ற கணக்கில் வீழ்த்தி ஞான முருகன்அணியும்இரண் டாவது போட்டியில் சமனிலை தவிர்ப்பு உதையில் 2:4 என்ற கணக்கில் ஹென்றீஸ் வி.க.வீழ்த்தி வீனஸ் வி.க. காலி றுதிக்கு முன்னேறின. (கு)

## குருநகர் பாடும்மீனை வீழ்த்தியது சென். ஹென்றியரசர் கல்லூரி



வடக்கின் பலம் வாய்ந்த அணிகள் மோதும் ஹென் றீசியன் சவால்கிண்ண உதை பந்தாட்ட காலிறுதி ஆட்டத்தில் சென். ஹென்றியரசர் கல் லூரி அணியை எதிர்த்து பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஆட்ட நேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையான தால்சமனிலையைதவிர்ப்பதற் காகதண்டஉதைவழங்கப்பட்டது. முடிவில் 3:2 கோல் கணக்கில் சென். ஹென்றீசியன் கல்லூரி வெற்றிபெற்றது. (கு)

## கில்லறி,யங்கம்பன்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 25 ஆம் திகதி சனி நடைபெற்ற முதலாவது போட்டிக்கு நியூட்டன் சமு கமளிக்காத பட்சத்தில் கில்லறிக்கு வெற்றி வழங்கப்பட்டது. அடுத்த போட்டியில் இளவாலை சென். லூட்ஸ் வி.கழகத்தை 1:0 என்ற கோல்கணக்கில் யங் கம்பன்ஸ் வி.கழகம் வீழ்த்தி அடுத்த சுற் றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

# ஆட்கடத்தல்களை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை!

## அமெரிக்கா அறிவிப்பு

வெளிநாடுகளுக்கு ஆட்கடத்தலை மேற்கொள்ளும் நாடுகளில் இலங்கையையும் கண்காணிப்பு பட்டியலில் அமெரிக்கா உட்படுத்தியுள்ளது.

அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொழிலாளர்களாக பலவந்தமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வேலை செய்விக்கப்படுகின்றனர். அத்துடன் பாலியல் கடத்தல்களும் இடம்பெறுகின்றன.

இலங்கையின் ஆண்கள் பெண்கள், சிறுவர்கள் மத்திய கிழக்குக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு நிர்மாணப்பணிகளுக்காகவும் ஆடை தொழிற்சாலைகளுக்காகவும், வீட்டுப்பணியாளர்களாகவும் அனுப்பப்படுகின்றனர்.

இதன்போது வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் இலங்கையர்கள் வேலைவாய்ப்பு நிறுவனாங்களுக்கு பெருந்தொகை பணத்தை செலுத்தவேண்டியேற்படுகிறது.

இந்நிலையில் அனுமதிப்பெற்ற முகவர் நிறுவனாங்களும் அனுமதிப்பெறாத உபமுகவர் நிலையங்களும் இயங்குகின்றன.

இதனால் அவர்கள் பாரிய கடன்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது. சில முகவர் நிறுவனாங்களும் முறைக்கேடான விதத்தில் செயற்படுகின்றன.

இதன்காரணமாக பலருக்கு உரிய வேதனங்கள் கிடைப்பதில்லை. ஜோர்தான், மாலைத்தீவுகள் மற்றும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சில இலங்கைப் பெண்கள் பாலியல் தொழிலுக்கு பலவந்தப்படுத்தப்படுகின்றனர்.

இலங்கையின் உள்நாட்டிலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடசெய்யப்படுகின்றனர்.

கரையோர சிறுவர்களும் சிறுமிகளும் பலவந்தமாக பாலியல் தொழிலுக்கு உந்தப்படுகின்றனர். சிலர் பிச்சை எடுப்பதற்கும் அல்லது குற்றச்செயல்களை செய்வதற்கும் இதன் காரணமாக தூண்டப்படுகின்றனர்.


கொழும்பிலும், இலங்கையின் பெரிய நகரங்களிலும் பெருந்தோட்டப்புறங்களை சேர்ந்த தமிழ் சிறுவர்களும் பெண்களுமே வேலையாட்களாக சேர்க்கப்படுகின்றனர்.

இதன்போது அவர்கள் மனரீதியாகவும், உரிய வேதனம் கிடைக்காமலும், நடமாட்ட சுதந்திரம் அற்றவர்களாகவும் நடத்தப்படுகின்றனர்

இதேவேளை மத்திய ஆசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள சில பெண்கள், இலங்கையில் அண்மைய வருடங்களாக பாலியல் தொழிலுக்கு பலவந்தப்படுகின்றனர்.

பொலிஸார் கப்பம் பெற்றுக்கொண்டு விபச்சார விடுதிகளை அனுமதிக்கின்றனர். இந்நிலையில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இலங்கை அரசாங்கம் ஆகக்குறைந்த தரத்தைக்கொண்ட தவிர்ப்பு நடவடிக்கைகளை கூட எடுக்கவில்லை என்று அமெரிக்க தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது

இதன்காரணமாக நான்காவது தொடர் வருடமாகவும் டயர் 2 (Tier 2) கண்காணிப்பு பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தனது அறிக்கையில் மேலும தெரிவித்துள்ளது. (செ-12)



## பிள்ளையானுக்கு பிணை மறுப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தனுக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சநதிரமணி சிவபாதம் பிணை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளார். அவரது பிணை மனுவை எதிர்வரும் 21-ம் திகதி வரை ஒத்திவைத்து நீதிபதி நேற்றுத் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 25.12.2015 அன்று மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக பிள்ளையான் உட்பட மேலும் நால்வர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-12)

## நல்லூர்க் கந்தன் மஹோற்சவம் விசேட கலந்துரையாடல் நேற்று

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகவுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு இந்த வருடம் மாநகரசபையினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு திருவிழா ஆயத்தம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் மாநகர சபை ஆணையாளர் வாகீசன் தலைமையில் மாநகர மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதாவது திருவிழா காலத்தில் தூக்குக் காவடி எடுத்து வரும் பக்தர்கள் தொடர்பிலான நடைமுறைகள் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் உற்சவ காலத்தில் ஆலய வளாகத்தை சூழவுள்ள வீதித்தடைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், நடை பாதை வியாபாரங்களை ஆலய உட்பகுதிகளில் அனுமதிக்க கூடாது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் பொது மலசல கூட வசதிகள் ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு புதிய நடைமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் களவுகள் முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு முன்ஆயத்த நடவடிக்கைகளில் ஒன்றாக கண்காணிப்பு கமெரா பொருத்தப்பட வேண்டும் எனவும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு தொடர்பில் சரியான நிதி அறவீடு கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அனைவருடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு சிறப்பான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். (செ-9)

## சிதம்பரபுர முகாம்...

கடந்த 25 வருடமாக வவுனியா, சிதம்பரபுரம் முகாம் பகுதியில் வசித்து வந்த 193 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அவர்கள் வாழ்ந்த முகாம் பகுதி சிதம்பரநகர் எனவும் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

நேற்று சிதம்பரபுரம் முகாம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் காணி உறுதிப் பத்திரங்களை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மத்திய மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம.சுவாமிநாதன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்ததுடன் கிராமத்திற்கான புதிய பெயர் பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்தும், தென்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களினாலும், இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியர்வர்களையும் தற்காலிகமாக தங்க வைப்பதற்காக 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிதம்பரபுரம் நலன்புரிநிலையம் கடந்த 25 வருடங்களாக தற்காலிக கொட்டகைகளுடன் முகாமாக செயற்பட்டு வந்திருந்தது.

இந்நிலையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இங்கிருந்த பலர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் மீள்குடியேறுவதற்கு காணிகள் அற்ற 193 குடும்பங்கள் எந்த வித அடிப்படை வசதிகளும் இன்றி அரச உதவிகள் நிறுத்தப்பட்ட நிலையில் இம் முகாமிலேயே அவலவாழ்வு வாழ்ந்தனர். இவர்கள் தமக்கு அப்பகுதி காணிகளையே வழங்கி மீள்குடியேற்றம் செய்யுமாறு பல வருடங்களாக கோரி வந்த நிலையில் தற்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் 6 பரப்பு காணி வீதம வழங்கப்பட்டுள்ளது. அக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

முகாமாக செயற்பட்டு வந்த இப்பகுதி சிதம்பரநகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் நேறறு முதல் புதிய கிராமமாகவும மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, ம.தியாகராஜா, ஜி.ரி.லிங்கநாதன், ஜெயதிலக, வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமாரா, பிரதேச செயலாளர் கா.உதயராசா உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர். (செ-250-281)

## 4 ஆர்.பி.ஜி செல்...

முல்லைத்தீவு சுண்டிக்குளம் காட்டுப்பகுதியில் ஆர்.பி.ஜி செல்கள் இருப்பதை அவதானித்த விறகுவெட்டச் சென்றவர்கள் அதுதொடர்பில் தர்மபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய பொலிஸார் நேற்றுக் காலை தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்

குறித்த காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் பாவிக்கப்பட்டதாக கூறப்படும் பதுங்கு அரணுக்கு அருகில் நான்கு ஆர்.பி.ஜி ரக செல்கள் இருப்பதனை அவதானித்த பொலிஸார் குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கி உள்ளனர்

அத்துடன் மேற்படி குறித்த ஆர்.பி.ஜி ரக செல்களை மீட்டு செயலிழக்க செய்வதற்கும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் அனுமதி தேவைப்படுவதால் கிளிநொச்சி நீதவானின் அனுமதிக்காக காத்திருப்பதாக தர்மபுரம் பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-281-310-312)

## மைத்திரியின் பாதுகாப்பு அதிகாரி மர்மமான முறையில் மரணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளவிருந்த நிலையில், அதன் பாதுகாப்பு அதிகாரி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

ரபுக்கண பதமுரே மைதானத்தில் இரவு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரி 52 வயதுடைய ரம்புக்கண பொலிஸ் நிலையத்தில் இணைந்து கடமையில் ஈடுபட்டு வந்த அதிகாரி என தெரியவந்துள்ளது.

கேகாலையில் இன்றையதினம் நடைபெறும் நிகழ்வொன்றில் ஜனாதிபதி கலந்து கொள்ளவிருந்தார். இந்நிலையில் நிகழ்வு நடைபெறவிருந்த மைதானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியுடன் மேலும் ஒரு பொலிஸ கான்ஸ்டபில் மைதானத்தின் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் இந்த பொலிஸ் அதிகாரி மலசலகூடத்திற்கு சென்றிருந்த நிலையில் திரும்பி வராத காரணத்தினால் அவருடன் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபில் இது தொடர்பில் தேடிப் பார்த்துள்ளார்.

இதன்போது மலசலகூட த்திற்கு அருகில் இந்த பொலிஸ் அதிகாரி உயிரிழந்த நிலையில் விழுந்து கிடந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாக தகவல்கள் வெளியான நிலையில்,ஜனாதிபதிக்கான பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-12)



ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா செயலகத்தில் இச்சந்திப்பு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

## அரசாங்கத்தை...

நோக்குடன் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துக்கொள்ள தான் தீர்மானித்ததாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் தலைவரான சரத் பொன்சேகா, ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொள்ளும் வைபவம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற போது அவர் இவ்வாறு கூறினார்.

தனது கட்சியான ஜனநாயகக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து விலகியுள்ளதாக தெரிவித்த சரத் பொன்சேகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இனிவரும் காலத்தில் தனது அரசியல் தலைவராக செயற்படுவார் எனவும் கூறினார்.

ஜனநாயகக் கட்சி இன்னமும் கலைக்கப்படாத நிலையில், அக்கட்சில் அங்கம் வகித்த முக்கியஸ்தர்கள் நேற்றைய தினம் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டனர் எனவும் அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதனிடையே தனது அழைப்பை ஏற்றே சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துக் கொண்டார் என இங்கு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார். (செ-11)

## ஈழ அகதிகள்...

கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 50 ஆயிரம் குடும்பங்கள் வரையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்புவதற்குத் தயாராக உள்ள போதிலும் அவர்களுக்கு எதுவித உதவியோ அல்லது ஒத்தாசைகளோ கிடைக்கப்பெறும் என்ற உத்தரவாதம் அற்ற நிலையில் மீண்டும் தமது வாழ்விடங்களுக்குத் திரும்பி வர அவர்கள் அச்சங் காட்டுகின்றார்கள்.

இந்தியாவிலிருந்து திரும்பிய சில குடும்பங்கள் தமக்கு எதுவித உதவியும் அரசாங்கத்திடம் இருந்தோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ கிடைக்கப் பெறவில்லை என்று கூறுகின்றார்கள்.

அனுமதிப் பத்திரங்கள் வைத்திருக்கும் சிலர் தமது காணிகளைப் பார்க்கச் சென்றால் பிறமாவட்டங்களில் வாழ்ந்த மக்கள் தெற்கிலிருந்து வந்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைக் கண்டுள்ளார்கள். இராணுவம் அவர்களுக்குத் துணை போகின்றது என்று கூறுகின்றார்கள்.

தாங்கள் இந்தியாவிலிருந்த காலத்தில் அங்கு பிறந்து வளர்ந்த அவர்களின் பிள்ளைகள் போதிய கல்விகளைப் பெற்றிருந்தும் இங்குவந்தவுடன் அரச உத்தியோகங்களுக்கு விண்ணப்பிப்பதில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி எமக்கு எடுத்தியம்புகின்றார்கள்.

எனவே இந்தியாவில் இருந்து திரும்பும் குடும்பங்களின் புனர்வாழ்வு பற்றி முறையானதிட்டங்கள் வகுக்கப்படவேண்டும். திரும்பிவரக் கூடிய குடும்பங்கள் இப் பகுதிகளில் குடியேறிசுயமாகத் தொழில் முயற்சிகளில் ஈடுபடும் வரை அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் அவர்களை மீளக்குடியேற்றமுடியும்.

நான் 2014ஆம் ஆண்டில் சென்னை சென்றபோது அங்கு வாழ் எம்மக்கள் முக்கியமாக எடுத்துக் கூறிய விடயம் தம் குழந்தைகளின் கல்வி பற்றியதே. அவர்கள் நாடு திரும்பினால் அவ்வாறான கல்வியைத் தம் பிள்ளைகள் பெறுவார்களோ என்ற அச்சம் அவர்களை வாட்டியது. இங்குள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் பேசியதில் அங்கு கல்வி கற்பவர்கள் தமது பெற்றோர் இங்கு வந்தாலும் தொடர்ந்து அங்கு கல்வி கற்கலாம் என்ற உத்தரவாதத்தைத் தந்திருந்தார்கள். அதனை உங்களுக்கு இத்தருணத்தில் சொல்லி வைக்கின்றேன்.

எனவே இவ்விடயங்களில் அரசாங்கமும் வடமாகாண சபையும் இணைந்த ஒரு வேலைத் திட்டத்தை விரைந்து ஆரம்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் நாம் மேலும் கூறிவருவது,

வட மாகாண வேலைத்திட்டங்கள், செயற்றிட்டங்கள், கொள்கைகள் பற்றி நடவடிக்கைகள் எடுக்கும் போது இறுதித் தீர்மாணங்கள் எடுக்க முன்னர் எங்களுடன் அதாவது வட மாகாண சபையுடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுங்கள். தான்தோன்றித்தனமாக முடிவு களை எடுக்கவிழையாதீர்கள். ஏன் பிரதம செயலாளருக்குத் தெரியப்படுத்தினோமே என்று கூறுவீர்கள். பிரதம செயலாளர் தொழிற்திறனுடனும், நிர்வாகத் திறனுடனும் நடக்கும் மத்தியால் நியமிக்கப்பட்ட ஒருஅலுவலர்.

அரசியல் ரீதியாக விடயங்களை ஆராய்வதென்றால் அவற்றை மக்கள் பிரதி நிதிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். பல செயற்றிட்டங்களின் தூரநோக்குப் பாதிப்புக்களை எம் மக்கள் பிரதிநிதிகளே அடையாளங் காணக் கூடியவர்கள் என்பதை தெரியப்படுத்துகிறேன்.

பல வருடப் போராட்டம் இன்று பயன் அளித்துள்ளது. எல்லைக் கிராம எம்மக்களின் ஏக்கங்கள் சில இன்று நீக்கங் கண்டுள்ளன. மாகாணமும் மத்தியும் மனமுவந்து மனிதாபிமானத்துடன் செயல்பட்டதால் தற்போது இங்கே கூடியிருக்கும் குடும்பங்கள் அனைவருக்குந் தலா 6 பரப்புக் காணி வழங்கப்பட்டு அதற்கான காணி அனுமதிப்பத்திரமும் வழங்கி வைக்கப்படுகின்றன.

தமிழர்களின் பூர்வீகக் கிராமமாக விளங்கக்கூடிய சிதம்பரபுரம் வவுனியா மாவட்டத்தின் தெற்கு எல்லையிலும், அனுராதபுர மாவட்டத்தின் வடக்கு எல்லைக்கு சற்று அப்பாலும் அமைந்திருக்கக்கூடிய ஒரு கிராமம்.

ஆகையால் இது புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. எமது நிலங்கள் பாதுகாக்கப்படுவதற்கு எல்லைப்புறக் கிராமங்களின் புனரமைப்புக்களும் விஸ்தரிப்புக்களும் அத்தியாவசியமானவை. அதனை எமது அரச அலுவலர்கள் புரிந்துகொண்டு நடந்து கொள்ள வேண்டும்.

சில அரச அலுவலர்களின் தன்னிச்சையான தன்னலம் கருதிய நடவடிக்கைகள் எமக்கு வருத்தத்தைத் தருகின்றது. எம் மக்களை உதாசீனஞ் செய்து மாற்றாருக்கு மன மகிழ்வை ஊட்டப் பாடுபடும் அவர்களின் மனோநிலை மாறவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றோம். இக்கிராமம் புதிய கிராமம் என்பதால் இதற்குரிய அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. முக்கிய விடயங்களில் நாம் கூடிய கவனஞ் செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9,250)

## போர்க்குற்ற...

தின் நீதித்துறையானது நம்பகத்தன்மையற்றது என்பதனால், சுயாதீனமானதும் பக்கச் சார்பானதுமான பொறுப்புக்கூறல் செயன் முறைக்கு சர்வதேச பங்களிப்பு அத்தியாவசியமான ஒரு கடப்பாடு என்பதில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

இலங்கை அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட பெரும் குற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாகிய தமிழர்களும், இதே காரணத்திற்காகவே, பொறுப்புக்கூறல் செயன்முறைகள் உள்ளகரீதியாக நிர்வகிக்கப்படுவதை நிராகரித்தும், சர்வதேச பொறுப்புகூறல் செயல்முறையின் அவசியத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள்.

இருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக இச்சபையில் (2015 ஒக்டோபர்) நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்க தீர்மானமானது, ஏறத்தாழ ஒரு உள்ளகப் பொறி முறையினையே ஏற்படுத்தி, அதில் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகளை சேர்ந்த நீதிபதிகள், வழக்குத்தொடுநர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஈடுபடுத்தப்படுவதை ஊக்குவிப்பதாக தெரிவித்து இருந்தது.

இப்படியாக, குறிப்பிடத்தக்க தளர்வு போக்கை இலங்கை அரசாங்கத்துக்கு மனித உரிமை பேரவை வெளிப்படையாக காட்டியிருந்த போதிலும், இலங்கை அரசாங்கமானது, (சர்வதேச பங்களிப்பை கோருகின்ற) பொறுப்புக்கூறல் செயன்முறையின் மிக அடிப்படையான விடயத்திலிருந்து பின்வாங்கிச் செல்வதில் மிக முனைப்புடன் செயற்படுகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு பங்குபற்றல் தொடர்பாக இந்த அவைக்கு எவ்வாறான வாக்குறுதிகளை வழங்கினாலும், இலங்கை அரசாங்கத்தில் அவரைவிட பொறுப்பும் அதிகாரமும் மிக்க இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் இந்த அவைக்கு வெளிவிவகார அமைச்சரால் வழங்கப்படும் வாக்குறுதிகளை, தொடர்ச்சியாக நிராகரிக்கும்விதமாக பொறுப்புக் கூறல் பொறிமுறையில் வெளி நாட்டு பங்குபற்றல் இருக்காது என்ற வாக்குறுதியை தமது வாக்கு வங்கியாகிய சிங்கள மக்களுக்கு தொடர்ச்சியாகவும் தெரிவித்து வருகிறார்கள் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும். இச்செயற்பாடுகள் , பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் அரசியல் விருப்பின்மையை தெட்டத் தெளிவாக பிரதிபலிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

## ஐ.நா சொல்வதில்...

ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு பெற்றுக்கொடுக்கபடவில்லை.

அத்துடன் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகளிலும் இன்னும் தீர்வு காணப்படவில்லை.

இவற்றைவிட, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கும் இதுவரையிலும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்கின்ற அவலநிலை காணப்படுவதுடன், மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் தாமதமாகிக் கொண்டு செல்கின்றன.

எனவே அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் ஊடாகவே, சர்வதேசத்தின் உதவியை தொடர்ந்து பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இலங்கை தொடர்பில் தனது வாய்மூல அறிக்கையினை சமர்பித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை அரசாங்கம் சிறுபான்மை மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லையென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## புலிகளின் முகாமில்...

கிளிநொச்சி பொலிஸார், அப்பகுதி கிராம அலுவலர், சமாதான நீதிவான் ஆகியோர் முன்னிலையில், அப்பகுதியிலுள்ள இரண்டு இடங்களில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவ்இடங்களில்எவ்வித ஆயுதங்களும் கிடைக்காமையால் அகழ்வுப் பணிகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.(செ-15,281,312,310)

## பயங்கரவாத...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்குறித்து ஆராய சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத்தமை காணாமல்போனோர் விடயத்தில் முக்கிய படிமுறையாகும்.

எனினும் அரசாங்கம் வழங்கிய இன்னும் பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

அதற்கு பதிலாக சர்வதேச தரத்துடன் கூடிய சட்டம் வரவேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு ள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (செ-11)


### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

- அலுவலகச் செய்தியாளர்-பெண்கள் (உள்ளகம், பகல் கடமை)
- அலுவலகச் செய்தியாளர்-ஆண்கள் (உள்ளகம், வெளியகம், பகல், இரவுக் கடமை)
- கணனி ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு-இருபாலாரும் (அனுபவம் உடையவர்கள் மட்டும்)

தகைமையும் விருப்பம் உடையவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று (01.07.2016) பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு:-யாழ்.நகரில் இருந்து 7கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி பொது முகாமையாளர்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### பகிரங்க ஏலவிற்பனை

பாவித்த மாணவர் மேசை கதிரைகள், போட்டோபிரதி இயந்திரம், கணனி உபகரணங்களும் ஏனைய இலத்திரனியற் பொருட்களும் மற்றும் ஸ்கிரீன், தராசு, சுருதிப்பெட்டி, பூவாளி என்பனவும் 05.07.2016 காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

அதிபர்
யா/கொழும்புத்துறை இந்து ம.வி (5095)

### நீங்கள் தொழில் தேடுபவரா?

5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management — UK Certified

CERTIFICATE - DIPLOMA - DEGREE

Up to 30% Discount

With FREE English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் 08/07/2016 - Friday
அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business • Hospitality • English
SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

### FRENCH LANGUAGE CENTRE

FALC "FOR THE BEST FRENCH FOREVER"

FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

(C-5020)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### அரசியல் விஞ்ஞானம் கருத்தரங்கு

A/L 2016

- MCQ
- எதிர்பார்க்கை வினாக்கள்
- விடை எழுதும் முறை

BY :-
K. சுகாஸ் & சி.அ. யோதிலிங்கம்

02.07.2016 சனி பி.ப 1.00 மணி

வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்

DCM - யாழ் நகர் (5093)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.